REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 23 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 92 இல. 20 | Tuesday 23, January, 2024 | 12பக்கங்கள் | 50/-







## போக்குவரத்து குற்றங்களை கண்காணிக்க சிசிடிவி தொழில்நுட்பம்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரால் அங்குரார்ப்பணம்



இலங்கை பொலிஸ் திணைக்களம், புதிதாக பொலிஸ் சிசிடிவி கண்காணிப்பு கெமரா பிரிவை (Police CCTV surveillance Division) திறந்துள்ளது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் இப்பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

இதன் கீழ், 24 மணி நேர சேவையாக, கொழும்பு நகரில் போக்குவரத்து விதிமீறல்கள் சிசிடிவி மூலம் 04

## 91 வீதமான குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசிகள்

### சுகாதாரத்துறையை வலுப்படுத்த இவ்வாண்டில் திட்டம்



நாட்டில் 91% குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

தட்டம்மை நோய், இந்நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த காலங்களில் தட்டம்மை நோய் மீண்டும் தலைதூக்கியதால், இவ்வாறான தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் 04

## தமிழரசு கட்சியின் தலைவர் சம்பந்தன் எம்பியுடன் பேச்சு



இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடினார்.

திங்கட்கிழமை (22) அவரது கொழும்பில் உள்ள இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. சம்பந்தனின் ஆசியைப்பெற்ற 04

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை துப்பாக்கிச் சூட்டில், ஐவர் பலி

### கெப்ரக வாகனத்தில் வந்தோர் சரமாரித் தாக்குதல், பலர் படுகாயம்



**பொலிஸ் விசாரணையில் துலங்கலாகும் திடுக்கிடும் தகவல்கள்**

தெற்கு நெடுஞ்சாலையில் பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில், நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐவர் ஸ்தலத்தில் உயிரிழந்தனர். இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று (22) காலை 7.45 மணியளவில் இடம்பெற்றது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மாத்தறை – பெலியத்த நுழைவாயிலுக்கு அருகிலேயே, இந்த துப்பாக்கித் தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். கெப்ரக வாகனத்தில் வந்த இனந்தெரியாத சிலர், வீதியால் சென்று கொண்டிருந்த டிஃபென்டர் காரில் பயணித்தவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர்.

இதில், நால்வர் ஸ்தலத்தில் உயிரிழந்த நிலையில், ஒருவர் தங்கல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். "அபே ஜனபல" கட்சியின் தலைவர் சமன் பெரேராவும் இத்தாக்குதலில் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம், அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இத் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞன் தொடர்பில், சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

கையடக்கத் தொலைபேசி கடையின் உரிமையாளர் ஆசனத்தில், தொலைபேசியை சார்ஜ் செய்து கொண்டிருந்த மிந்திக அளுத்கமகே என்ற 22 04

## IMF இன், இரண்டாவது மீளாய்வு மார்ச்சில்



சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மீளாய்வு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மீளாய்வின் பின்னரே நாட்டில் மூன்றாம் தவணை வெளியிடப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகர்களிடம் இருந்தும் வற் வரியை அறவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு வரி செலுத்தாமல், வருவாயை தமது 04

## பாராளுமன்றில் விவாதத்திற்கு வருகிறது சர்ச்சைக்குரிய நிகழ்நிலை சட்டமூலம்



பலரது எதிர்ப்புகளுக்கும் சர்ச்சைகளுக்கும் வழிவகுத்துள்ள நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் இன்றும் (23) நாளையும் 24) நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளபட உள்ளது.

இதன்படி நாளை இந்த சட்டமூலத்திற்கு பெரும்பாலும் வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன் போது அதில் பல திருத்தங்கள் செய்யப்படலாம் எனவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அண்மையில் இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முதல் வாசிப்புக்காக சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொலைபேசி அழைப்புக்களில் அச்சுறுத்தி பணம் பறிக்கும் கும்பல்

### விழிப்புடன் செயற்பட பொலிஸார் எச்சரிக்கை



நாட்டின் பல்வேறு பகுதிகளில், அலைபேசி அழைப்புகள் செய்தும், பொலிஸ் அதிகாரிகள் போல் வேடமணிந்தும் மக்களை ஏமாற்றி, பணம் பறிப்பதற்கு, கும்பல் ஒன்று திட்டமிட்டு செயல்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பொய்யாகக் கூறி பணம் பெற்றுக்கொள்ளும் நபர்கள் தொடர்பில், பல்வேறு 04

## அமெரிக்க தூதுவர் ஜூலிசாங் சிவனொளிபாதமலையில் வழிபாடு




இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசாங், சிவனொளிபாதமலைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இப்பயணத்தின் சிறந்த பகுதியாக, இலங்கையர்களுடனான அன்பான சந்திப்புக்கள் அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேநீர் அருந்தும் போது இடம்பெற்ற உரையாடல்களும், தமக்கு அவர்கள் காட்டிய கரிசனைகளும் 04

## ராமர் கோயில் கருவறை மக்கள் பார்வைக்கு திறப்பு

### பிரதமர் மோடி முன்னிலையில் பிரமாண்ட ஏற்பாடு



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை வெகு விமரிசையாக நடந்தேறியது. ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை விழாவை முன்னிட்டு அயோத்தி விழாக்கோலம் பூண்டிருந்தது. அயோத்தி ராமர் கோயில் பல்வேறு விதமான மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வண்ணமயமாகக் காட்சி அளிக்கிறது. அயோத்தி ராமர் கோயில் பிராண பிரதிஷ்டை விழாவில் பங்கேற்க, நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவிஐபிக்கள் 04

## மரக்கறிகளின் விலைகள் 50 வீதத்தால் குறைவு

### மீன் விலைகள் குறைந்ததன் எதிரொலி




நாட்டில் கடந்த ஐந்து தினங்களுக்குள் மரக்கறிகளின் விலை 40 தொடக்கம் 54 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் நடைபெற்ற 04

## கொழும்பு, கண்டி, யாழில் விசேட டெங்கு தடுப்பு ஏற்பாடு

### வருடம் முழுவதும் செயற்படுத்த திட்டம்



கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தை வருடம் முழுவதும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. இம்மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதால், இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர 04

## O/L விண்ணப்பங்கள் இன்று முதல் ஏற்பு

O/L பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் இன்று முதல் (23) பெப்ரவரி 15ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்பட வுள்ளது. விண்ணப்பங்களை நிகழ்நிலையில் மாத்திரமே மேற்கொள்ள முடியும் என பரீட்சைத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, சகல பாடசாலை 04

## அரிசி இறக்குமதிக்கான அவசியம் ஏற்படவில்லை



நாட்டில் நுகர்வுக்குத் தேவையான அரிசியை உற்பத்தி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதனால், அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் 1984 இல், அரிசி பதப்படுத்தும் 04

## IMF உடன் இணைந்து செயற்படுவோம்



ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்து இணைந்து செயற்பட உள்ளதாகவும், இலங்கையுடனான தற்போதைய ஒப்பந்தத்தில் மாற்றங்களைச் செய்யப்போவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி பொது மக்கள் மீது அதிக வரிகளை விதிக்கும் மற்றும் அரசுக்கு சொந்தமான 04

## இலங்கை தமிழர்களுடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும்



இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் சவால்களுக்கு உட்பட்டு வருவதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே கனடா சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து, தமிழர் நலன் தொடர்பில் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழாவில் பங்கேற்று கருத்து 04

# நகர்வலம்



# வடமத்திய மாகாண பாடசாலைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்த நடவடிக்கை

## தேவையான வசதிகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநர் மஹிபால ஹேரத் உத்தரவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாண பாடசாலை மாணவர்களின் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வியை வழங்கும் நோக்கில் மாகாண பாடசாலைகளுக்கு (ஸ்மார்ட் பலகைகள்) மற்றும் புதிய கணினிகளை வழங்குவதற்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனூடாக அநுராதபுரம் மாவட்டத்தில் 26 பாடசாலைகளுக்கு 11.7 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க 26 (ஸ்மார்ட் பலகைகள்) மற்றும் 26 பாடசாலைகளுக்கு 22.4 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க (Allin on) 69 கணினிகள் வழங்கும் நிகழ்வு மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மற்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகியோரின்



தலைமையில் நேற்று (22) வட மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. உலக வங்கிக் கடன் உதவியின் கீழ் செயற்படும் பொதுக் கல்வி நவீன மயமாக்கால் திட்டம் (JEMP) இதற்கான நிதியினை வழங்கியுள்ளது. இதுவரைக்கும் வட மத்திய மாகாண பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள (ஸ்மார்ட் பலகைகளின்) எண்ணிக்கை 150 ஆகும்.

வழங்கப்பட்டுள்ள. உபகரணங்கள் மூலம் சிறந்த நவீன கல்விச் சேவையை பிள்ளைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிபர்களுக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வின் போது ஆளுநரின் செயலாளர். விஜய வனசிங்க மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் அஹயலக்ஷ்மி ஹேவாபதிரன மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர் எஸ். எம். டபிள்யூ . சமரக்கோன் அதிபர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# மயூரபதி ஆலயத்தில் சிறப்பு பூஜை





இந்தியாவின் அயோத்தி ராமர் கோயி`லில் நேற்று திங்கட்கிழமை (22) இடம்பெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு, மயூரபதி ஆலயத்தில் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெ. சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலய கலாசாரப் பணிப்பாளர் அங்குரான் தத்தா உள்ளடங்கலான பலர் கலந்து கொண்டனர். மேலும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் தலைமையில், இடம்பெற்ற கும்பாபிஷேகப் பெருவிழாவை பக்தர்கள் காணொளி மூலம் காண்பதற்கான ஒழுங்குகளை ஆலய அறங்காவலர் சபை ஏற்பாடு செய்திருந்தது.

# கற்பிட்டி பிரதேச செயலகத்தில் தைப்பொங்கல் விழா நிகழ்வு



**(புத்தளம் தினகரன் நிருபர்)**


இவ்வருடத்துக்கான தைப் பொங்கல்விழாகற்பிட்டிபிரதேச செயலகத்தில் நிருவாக உத்தியோகத்தர் எஸ்.மர்ஜானா தலைமையில் அண்மையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

பொங்கல் விழா என்பது உலக வாழ் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஓர் அறுவடைப் பண்டிகை ஆகும். இவ் விழா தமிழர் செறிந்து வாழும் பிரதேசங்கள், மாவட்டங்கள் மற்றும் நாடுகள் போன்றவற்றில் வாழும் அனைத்து இடங்களிலும் கொண்டாடப் படுகிறது. மேலும் பொங்கல் விழா உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் நன்றி செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படுகிறது.

கல்பிட்டி பிரதேச செயலக வளாகத்தில் மாவிலை மற்றும் தென்னோலை தோரணங்கள் போடப்பட்டு மூவின மக்களின் பங்குபற்றுதலோடும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்கேற்போடும் மிக விமரிசையாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில்

# இருதய நோய் மருந்துகள் தட்டுப்பாடு; கிளினிக் வரும் நோயாளர் பாதிப்பு



**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் இருதய நோய்க்காக " கிளினிக்" வரும் நோயாளிகளுக்கு தேவையான முக்கிய மருந்துகளுக்கு டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படும் சில மருந்துகளை தனியார் மருந்தகங்களில் பெற்றுக் கொள்ளுமாறும் நோயாளிகள் பணிக்கப்படுவதால் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருவதோடு கூடுதலான பணத்தை மருந்துகளுக்கு செலவு செய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்கு தாம் தள்ளப்படுவதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 19ஆம் திகதி இருதய நோய்க்காக "கிளினிக்" வந்த நோயாளிகளுக்கு சுவாச நோய்க்கான "இன்ஹேலர்" மருந்துகள் வழங்கப்படவில்லை.

ஒவ்வொரு நாளும் காலை, மாலை தொடர்ச்சியாக பாவிக்க வேண்டிய "இன்ஹேலர்" மற்றும் அவசர நிலைமையின் போது பாவிக்க வேண்டிய "இன்ஹேலர்" உட்பட முக்கிய சில மருந்துகளும் வழங்கப்படவில்லை. இதனால் அதிகாலை 3.00 மணி தொடக்கம் காத்திருந்தும் தாம் ஏமாற்றப்பட்டதாகவும், எம்மில் அனேகமான பணவசதி இல்லாத நோயாளிகள் வெறுமனே வீடு திரும்பும் நிலை ஏற்பட்டதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையின் சம்பந்தப்பட்ட நிர்வாகம் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு பாதிக்கப்பட்ட நோயாளிகள் வேண்டுகோள் விடுகின்றனர்.

### அலிசப்ரி ரஹீம் எம்.பியின் சொந்த நிதியில்

# புத்தளம் நகர சபைக்கு ஐந்து டைடோ வண்டிகள் அன்பளிப்பு



**(புத்தளம் தினகரன், கற்பிட்டி தினகரன் நிருபர்கள்)**



புத்தளம் நகரில் அதிகரித்து வரும் குப்பைகள் அகற்றுவதில் ஏற்படும் தாமதத்திற்கு காரணமாக மனித வளம் மற்றும் இயந்திரப் பற்றாக்குறை நிலவுவதை கருத்தில்கொண்டு புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நகர அபிவிருத்திக்குழுத் தலைவருமான அலி சப்ரி றஹீம் தனது சொந்த நிதியினூடாக ஐந்து டைடோ வண்டிகளையும் ஒரு டெக்டர் வண்டியையும் பெற்றுக்கொடுத்துள்ளார். வடமேல் மாகாண ஆளுநர் முன்னிலையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில், 05 வண்டிகளையும் அதற்கான ஆவணங்களையும் புத்தளம் நகர சபை செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் கையளித்தார். இதன் ஊடாக இனிவரும் காலங்களில் தினசரி வீடுகளில் காணப்படும் உணவுக் கழிவுககளை தனியாக பிரித்து அன்றாடம் உலா வரும் டைடோக்களுக்கு வழங்குவதன் மூலம் சுகாதாரமான வீடாக தமது வீடுகளை புத்தளம் மக்கள் வைப்பதற்கு வசதியாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# பஸ்–மோ. சைக்கிள் மோதி விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபரொருவர் பஸ் வண்டியொன்றுடன் மோதி ஏற்பட்ட விபத்தில், குறித்த நபர் பாரிய காயங்களுக்குள்ளாகி தங்காலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்பு உயிரிழந்துள்ளதாக வீரகெடிய பொலிஸார் (21) தெரிவித்தனர்.

வீரகெடிய, மெதமுலன கெடகாலகஹவத்த பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட ருவன் குமார எனும் இரண்டு குழந்தைகளின் தந்தையொருவரே இவ்வாறு விபத்திற்குள்ளாகி உயிரிழந்துள்ளார். இவர் சிவில் பாதுகாப்புப் படை வீரராக முல்கிரிகலை ராஜமகா விகாரையில் பணிபுரிந்த வந்தநிலையில், தனது வீட்டிலிருந்து விகாரைக்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்துகொண்டிருந்தபோதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

# திறப்பனையில் மிளகுச் செடிகள் வழங்கிவைப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**



திறப்பனை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் சுவடை பூமி தரிசன திட்டத்தின் ஏற்பாட்டில் மிளகு செடிகள் வழங்கும் நிகழ்ச்சியொன்று அண்மையில் நடைபெற்றது. திறப்பனை பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட 194 பயனாளிகளுக்கு 5950 மிளகு செடிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

திறப்பனை பிரதேச செயலாளர் திருமதி கே.பி.கே.எல்.பி மதுவந்தி தலைமையில் மேற்படி நிகழ்ச்சி நடைபெற்றது.

திறப்பனை பிரதேச மக்களின் பொருளாதார மட்டத்தை உயர்த்துதல் மற்றும் ஏற்றுமதி விவசாய பயிர் திட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இங்கு மிளகு உற்பத்தி பயிற்சித் திட்டங்கள் 2023ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிளகுப் பயிர்ச்செய்கையின் நடவடிக்கைகளை பற்றி தற்சமயம் வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.



கொழும்பு 12, வாழைத்தோட்டம் அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலின் 100 வருட பூர்த்தியை முன்னிட்டு கல்வியில் சாதனை படைத்தவர்களையும் பள்ளிக்கு சேவையாற்றியவர்களையும் கௌரவிக்கும் வகையில் 'நஜ்மி ஆச்சிவ்ஸ் எவோர்ட் 2023' எனும் தொணிப் பொருளில் நிகழ்வு ஒன்று மருதானை டவர் மண்டபத்தில் பள்ளிவாசலின் தலைவர் எம்.ஏ.எம். நிஸ்வான் தலைமையில் நடைபெற்றபோது எடுத்த படம். (படம்: கொழும்பு தினகரன் நிருபர்)

# புத்தளம், மதுரங்குளியில் இனந்தெரியாத ஆணின் சடலம் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மதுரங்குளி களப்பு பிரதேசத்தில் இருந்து இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று (22) பகல் மீட்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்ற பொலிஸாரும் , புத்தளம் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரனைகளை மேற்கொண்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு களப்பு பகுதியில் இருந்து மீட்கப்பட்ட சடலம், நீதவான் விசாரனையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு அனுப்பபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மூன்று துப்பாக்கிகள் வைத்திருந்த நபர் கைது!

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மரதண்கடவல பெரியகுளம் பகுதியில் வீடொன்றை பொலிஸார் சோதனைக்குட்படுத்தியபோது, நபர் ஒருவரிடம் இருந்து மூன்று துப்பாக்கிகளை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரதண்கடவல பகுதியில் 'யுக்திய' சுற்றி வளைப்பின் போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12 துளை 2 துப்பாக்கிகளும் இந்நாட்டு தயாரிப்பிலான ஒரு துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் கெக்கிராவ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மரதண்கடவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் .

# கடுவெல நகரில் வாகன நெரிசலை அவதானிக்க கண்காணிப்பு விஜயம்



கடுவெல நகரில் நிலவும் வாகன நெரிசலை இல்லா தொழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடுவெல நகரில் நீண்ட காலமாக அதிக வாகன நெரிசல் ஏற்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறித்து பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர். இது குறித்து அவதானம் செலுத்திய அமைச்சர் அப்பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இ தன் போ து , கொழும்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஓய்வுபெற்ற மேஜர் பிரதீப் உடுகொட, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அத்தலோலுவகே மற்றும் மாகாண பொறியியலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, கடுவெல நகர ஆணையாளர் திருமதி தில்ருக்ஷி கமகே உள்ளிட்ட அதிகாரிகள், கடுவல வர்த்தக சமூகத்தினர் அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் சென்றிருந்தனர்.

நகரை அவதானித்து, போக்குவரத்து நெரிசலுக்கான காரணங்களைக் கண்டறிந்த அமைச்சர், தற்போதுள்ள பஸ்வண்டிகள் நிறுத்தும் இடங்களை முறைப்படுத்தி, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத இடங்களில் அமைக்குமாறு பொலிஸார் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

# வீதி விதிமுறைகளை மீறும் சாரதிகளை அவதானிக்க CCTV

கொழும்பில் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளை அடையாளம் காணவும், அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதற்கமைய, இன்று முதல் CCTV காட்சிகளை பயன்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு நகரங்களில் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சாரதிகள் CCTV காட்சிகள் மூலம் அடையாளம் காணப்பட்டு, அபராத சீட்டுகள் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.தூர பிரதேசத்திலிருந்து கொழும்புக்கு வரும் சாரதி ஒருவர், போக்குவரத்து விதிகளை மீறினால் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் அவர் வசிக்கும் பகுதியில் உள்ள பொலிஸாரின் ஊடாக மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த முறைமையின் கீழ் கொழும்பிற்குள் நுழையும் வாகனங்கள் இன்று முதல் 108 CCTV கமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். இந்த புதிய வேலைத்திட்டம் தொடர்பில் சாரதிகளுக்கு அறிவிக்கும் வேலைத்திட்டம் இன்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதற்கமைய, கொழும்பு நகருக்குள் நுழையும் 09 இடங்களில் அறிவிப்பு பலகைகளை பொருத்துவதற்கு பொலிஸார் ஏற்பாடு செய்துள்ளனர்.

Agriculture Modernization Project
Funded by: The European Union

## கமத்தொழில் அமைச்சு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு

**IDA Credit No.: CR 5873 LK/TF-B5382 – PROJECT ID No.: P156019**

**பெறுகை அறிவித்தல்**

**எட்டு மாத கால எல்லைக்கு 41 பயிர்செய்கை கம்பனிகளுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளுக்காக தனிப்பட்ட உசாத்துணையாளர்களை வாடகைக்கு அமர்த்துதல்**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து வேறுபட்ட நாணயங்களில் 125.00 மில்லியனுக்கு நிகரான அஐ டொலரை கடனாகப் பெற்றுள்ளதுடன் அதிலிருந்து 58.63 அஐ டொலரானது கமத்தொழில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஐரோப்பிய யூனியனிடமிருந்து 25 மில்லியனுக்கு நிகரா அஐ டொலரையும் மானியமாக கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்திற்கு வழங்கப்பட்டதுடன் அவற்றின் அண்ணளவாக 5.2 மில்லியன் அஐ டொலரானது பயிர்ச்செய்கையாளர் பயிற்சி மற்றும் திறன் கட்டியெழுத்தல் முதலீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றின் பெறுபேறுகளின் பகுதியொன்றை இவ்வாறான உசாத்துணை பணி ஒதுக்கீடுகளுக்கு செலவிடுவதற்கு கமத்தொழில் அமைச்சானது உத்தேசிக்கின்றது.

**www.asmp.lk/advertisement** என்பதிலுள்ள நியதிக்குறிப்புக்களை பார்வையிடவும்.

கமத்தொழில் அமைச்சு, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட உசாத்துளை பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கை கம்பனிகளின் உசாத்துணை சேவைகளுக்காக உங்கள் வரவுசெலவு முன்மொழிவுகளுடனான சுயதரவுகளை இப்போது அழைக்கின்றார்.

| | | |
|---|---|---|
| 01. | ISP Clusters, Anuradhapura District | LK-MoA-PMU-398036-CS-INDV |
| 02. | ISP Clusters, Polonnaruwa | LK-MoA-PMU-398046-CS-INDV |
| 03. | ISP Clusters, Matale | LK-MoA-PMU-398047-CS-INDV |
| 04. | ISP Clusters, Batticaloa | LK-MoA-PMU-398056-CS-INDV |
| 05. | ISP Clusters, Jaffna | LK-MoA-PMU-398060-CS-INDV |
| 06. | ISP Clusters, Mullaithivu | LK-MoA-PMU-398061-CS-INDV |
| 07. | ISP Clusters, Monaragala | LK-MoA-PMU-398062-CS-INDV |
| 08. | Pilot Clusters, Moneragala | LK-MoA-PMU-398069-CS-INDV |
| 09. | Pilot Clusters, Anuradhapura | LK-MoA-PMU-398076-CS-INDV |
| 10. | Pilot Clusters, Polonnaruwa | LK-MoA-PMU-398079-CS-INDV |
| 11. | Pilot Clusters, Matale | LK-MoA-PMU-398082-CS-INDV |
| 12. | Pilot Clusters, Batticaloa | LK-MoA-PMU-398084-CS-INDV |
| 13. | Pilot Clusters, Jaffna | LK-MoA-PMU-398088-CS-INDV |
| 14. | Pilot Clusters, Mullaithivu | LK-MoA-PMU-398089-CS-INDV |

தகுதியும் ஆர்வமுமுள்ள தனிநபர்கள் அவர்களின் சுயதரவுகள் மற்றும் வரவுசெலவு முன்மொழிவுகளை 2024 பெப்ரவரி 5 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேராக ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான இலக்கத்தை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைப்பதற்கு தயவு செய்து கவனிக்கவும். (விசாரணைகளுக்கு 0714961603 / 0777804550 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்)

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:**

**தலைவர்,**
**செயற்றிட்ட உசாத்துணை பெறுகைக் குழு,**
**விவசாய நவீனமயமாக்கல் திட்டம்,**
**கமத்தொழில் அமைச்சு, இல.: 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**
**21.01.2024**

# பொதுச் சேவைக்கான வெளிக்கள நடைமுறைப் பயிற்சி செயலமர்வு



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத்தியோகத்தர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் பல்வேறு திறன்களை விருத்தி செய்ய, வெளிக்கள நடைமுறைப் பயிற்சிப்பட்டறை அண்மையில் நடைபெற்றது.

குக்குலேகங்க லயா லெஷர் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வு, பணியக ஊழியர்களின் அறிவு மற்றும் திறனை

மேம்படுத்த பணியகத்தின் நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத்துத்துவ பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டம், ஏனைய பயிற்சித் திட்டங்களை விட தனித்துவமிக்கதாகும்.

அலுவலகப் பணிகளைத் தவிர பல நடைமுறைச் செயற்பாடுகளை உள்ளடக்கிய இத்திட்டம், தலைமைப் பயிற்சி, தலைமைத்துவ தீர்மானம் எடுக்கும் திறன் , மற்றும் கூட்டுப் பொறுப்பின் மூலம் நிறுவனத்தையும் வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வது போன்ற பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்ள தேவையான புதிய அனுபவங்களை பெற்றுக் கொள்ளும்வாய்ப்பைஅலுவலக பணியாளர்களுக்கு வழங்கியது.

பயனாளிகளுக்கு தரமான சேவையை வழங்க பணியகத்தின் நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத்துத்துவ பிரிவு ஆண்டுதோறும் இவ்வாறான பயிற்சி நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறது

வெளிக்களப் பயிற்சித் பட்டறை திட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சியாக நடைபெற்ற இந்நிகழ்வில், 80 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். எதிர்வரும் சில வாரங்களில் ஏனைய ஊழியர்களுக்கும் இந்தப் பயிற்சி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# சர்வதேச குர்ஆன் மனனப்போட்டியில் முதலாமிடம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



சர்வதேச அல் குர்ஆன் மனனப் போட்டியில் புத்தளம் மதுரங்குளி கனமூலையைச் சேர்ந்த அஷ்ஷெய்க் அல் ஹாபிழ் நஸ்மிர் நஸ்ருதீன் (தீனி) முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர், தனது ஆரம்பக் கல்வியை புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 7 வரை பயின்று, பின்னர் பாணந்துறை தீனியா அரபுக் கல்லூரியில் அல்ஹாபிழ் மற்றும் அல் ஆலிம் பட்டத்தை பெற்றுக் கொண்டார்.

அல்குர்ஆன் மேற்படிப்புக்காக பாகிஸ்தான் ஜாமியா பின்னூரியாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த இவர், அங்கு இடம்பெற்ற சர்வதேச அல்குர்ஆன் மனனப்போட்டியில் (10 ஜுசுக்கள்) கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்று நாட்டிற்கும், ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## அறிவித்தல்

அரச சார்பான ஏக்கலையில் அமைந்துள்ள வ/ப லக்திவ இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிட்டட் 2024ம் ஆண்டிற்காக பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் சார்பாக பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த பாதுகாப்புச் சேவை நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா - எல முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு வருகை தந்து நிறுவன வளாகத்தைப் பரீட்சித்துப் பார்த்த பின்னர் மீளளிக்கப்படாத ரூ.5000.00 கட்டணத்தை செலுத்தி அலுவலகத்திலிருந்து கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது லக்திவ இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிட்டட் இற்கு வருகை தந்து நிர்வாக அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூளையில் பாதுகாப்புச் சேவைக் கேள்வி 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024 பெப்ரவரி 14 ஆவதுடன், அன்றே நன்பகல் 12.00 மணிக்கு முன்பு கிடைக்கச் செய்தல் வேண்டும். பின்னர் கிடைக்கும் கடிதங்கள் ஏற்கப்படமாட்டாது.

பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள், 2024 பெப்ரவரி 14 நன்பகல் 12.00 மணிக்கு முன்பு நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டியதுடன், அக் கால எல்லையின் பின்னர் கிடைக்கும் கடிதங்கள் ஏற்க்கப்பட மாட்டாது.

கேள்விப் பத்திரங்களை திறத்தல் 2024 பெப்ரவரி 14ம் திகதி நன்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வ/ப லக்திவ இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிட்டட்,**
**இல.73, மினுவாங்கொட வீதி, ஏக்கல, ஜா - எல**
**தொலைபேசி இலக்கம்: 0112236530**



# தமிழர்களின் உரிமை, தேசியத்துக்காக ஜனநாயக செயற்பாடுகள் துரிதமாக்கப்படும்

தமிழர்களின் உரிமை, தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஸ்வரனுடன் இணைந்து செயற்படவுள்ளதாக

தமிழரசு கட்சியின் புதிய தலைவர் ஸ்ரீதரன் சூளுரைத்துள்ளார். கட்சியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீதரன் எம்பி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்;

இலங்கை தமிழரசு கட்சியின் வரலாற்றில் ஜனநாயக ரீதியான முறையில் தலைவர் தெரிவு இடம்பெற்றுள்ளது. இத்தெரிவு வரலாற்றில் முக்கிய தடம் பதித்துள்ளது. என்னுடன் போட்டியிட்ட எம்.ஏ.சுமந்திரன் சீ.யோகேஸ்வரனுடன் இணைந்து கட்சியின் செயற்பாடுகளை பல வழிகளில் உயர்த்துவேன். எமது மக்களின் உரிமைக்காக, தேசிய இருப்புக்காக,தொடர்ந்து பொறுப்போடும் கடமையுடனும் செயற்படுவோம். என்னை தெரிவு செய்வதற்கு காரணமான இறைவனுக்கும் எனக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அயராது உழைத்தவர்களுக்



கும் நன்றிகள்.எனது தெரிவு, பல பேருக்கு பல நம்பிக்கைகளை தந்துள்ளது. இளைஞர்கள் யுவதிகள் தற்போது புதிய அக்கறையுடன் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

நண்பர் சுமந்திரன் கூட பல தடவை தெளிவாக பல இடங்களில் சொல்லியிருந்தார். எங்களுடைய பங்கு என்பது இனம் சார்ந்தது. தமிழ் தேசியத்தினுடைய இருப்பு சார்ந்தது. எங்களுடைய இனத்துக்கான அடிப்படை உரிமைகள் சார்ந்தது. இந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் செயற்பட்டு பலப்படுவோம் என்றார்.

## இன்றைய பலன்கள்



**( 23. 01. 2024 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
எதிர்பார்க்கும் தனவரவுகள் சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்தாலும் செலவுகள் அதற்கு முன்னர் காத்து நிற்கும்.

**ரிஷபம்:**
குடும்பத்தோடு வெளியூர் பயணம் செல்ல திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் அவசரமாக செய்த பணி ஒன்றில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்தீர்கள்.

**மிதுனம்:**
நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புகளில் மிகவும் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரலாம்.

**கடகம்:**
நீண்ட நாட்களாக தேடிக் கொண்டிருந்த ஒரு பொருள் எதிர்பார்க்காமல் கிடைக்கலாம். வழக்குகள் சுமூகமான முடிவுக்கு வரும்.

**சிம்மம்:**
அலுவலகத்தில் நீண்ட காலமாக எதிர்பார்த்து காத்திருந்த கடன் தொகை வந்து சேரும். அந்த தொகையால் நின்று போயிருந்த பணிகளை தொடருவீர்கள்.

**கன்னி:**
சில காரியங்கள் உங்கள் நண்பர்களால் நடைபெற வாய்ப்பு ஏற்படும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு அலுவலகத்திலேயே பொறுப்புக்கள் ,பதவி உயர்வு கிடைக்கலாம்.

**துலாம்:**
சில பணிகளை நினைத்தபடி செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். வரவேண்டிய தர வரவுகள் தள்ளிப் போகும்.

**விருச்சிகம்:**
ஜாமீன் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். தன வரவுகள் குறிப்பிட்ட காலத்தில் வந்து சேரும்.

**தனுசு:**
அக்கம் பக்கத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். உத்தியோகத்தில் பதிவேடுகளை இடம் மாற்றி வைத்துவிட்டு உயர் அதிகாரி கேட்கும் போது கையில் கிடைக்காமல் அவதிப்பட நேரிடும்.

**மகரம்:**
உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உடன் பிறந்தவர்களின் விவகாரங்களில் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்.

**கும்பம்:**
சிலருக்கு அரசாங்கத்தின் மூலம் விருதும் பாராட்டும் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படலாம்.

**மீனம்:**
சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்கு பெறுவீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு பொறுப்புக்கள் அதிகரிக்கலாம்.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை...

வயதுடைய இளைஞனும் இத்தாக்குதலில் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

மூன்று சகோதரர்களைக் கொண்டுள்ள இவ்விளைஞன் குடும்பத்தில் இளையவர் எனவும், இவரின் மூத்த சகோதரர் விமானப்படை அதிகாரி எனவும் மற்றுமொரு சகோதரர் கொரியாவில் பணிபுரிவதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த மிந்திக அளுத்கமஎனும் இளைஞர் கொரிய வேலை வாய்ப்பிற்காக, இன்னும் சில நாட்களில் கொரியாவிற்கு செல்லவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடுகாவ பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணி புரிந்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இவ்விளைஞர், நண்பரின் கடைக்கு சென்றிருந்தபோதே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார்.

கடையின் உரிமையாளர், தொலைபேசி அழைப்பிற்காக வெளியே வந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இக்கடை உரிமையாளர் பிரதேசத்தில் உள்ள மதுபானக் கடையொன்றிலிருந்து 21 இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்ட சம்பவத்தில் கைதாகி, பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம்மை தாக்கியதாக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாம், தாக்கல் செய்துள்ளதாக கடை உரிமையாளர் பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மனுவைத் தாக்கல் செய்த பின்னர் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பல தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும், நீதவானின் விசாரணையில் அக்கடை உரிமையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போக்குவரத்து குற்றங்களை...

கண்காணிக்கப்படும். ஐரோப்பா உட்பட உலகின் பல வளர்ந்த நாடுகளில் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் பயன்படுத்தும் இந்த நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், நாட்டில் உள்ள வீதிகளைக் கண்காணிக்கவும், போக்குவரத்து கடமைகளை மிகவும் திறமையாகவும் ஒழுங்கு செய்ய முடியும். இது,கொழும்பு நகரின் பல இடங்களில் போக்குவரத்து பொலிஸாரின் நேரடிப் பணிகளை குறைக்க உதவியுள்ளது. முன்னாள் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிசிடிவி கமரா அமைப்பு, பல தசாப்தங்களாக கொழும்பில் நிறுவப்பட்டிருந்தும் இதுவரை அதிலிருந்து பயனுள்ள சேவை எதுவும் கிடைக்கவில்லை. தற்போது, எட்டு மணி நேர வேலையின்போது போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்ட போக்குவரத்து விதிமீறல்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து முதல் ஆறாக வுள்ளது . ஆனால் சிசிடிவி கேமரா மூலம் முன்னூறுக்கும் மேற்பட்ட தவறுகளை அந்த இடத்திலேயே கண்டுபிடிக்க முடியும்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் போக்குவரத்து பொலிஸாருடன் நேரடி தொடர்பை பேணுகிறது. இதன்படி, கண்காணிக்கப்படும் வாகனங்களின் சட்டப்பூர்வ பதிவு, உரிமையாளர்கள் போன்ற ஆவணங்களை மிகக் குறுகியகாலத்திற்குள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள பொலிஸ் சிசிடிவி பிரிவுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் போக்குவரத்து விதிமீறலில் ஈடுபட்டாலும், சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தின் ஊடாக உரிமையாளருக்கு அறிவிக்கப்படும்.

பொலிஸாரின் சிசிடிவி பிரிவுக்கு இதைச் செய்யும் திறன் உள்ளது. இதனூடாக பொதுமக்களுக்கு நட்பான சேவையை வழங்குவதே பொலிஸ் திணைக்களத்தின் நோக்கமாகும்.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி மாதம் (22) முதல் ஒரு வார காலத்திற்கு இச்சேவை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனை பின்பற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும் பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது. குறித்த வாரத்தில் இம் முறைமையின் ஊடாக அவதானிக்கப்படும் போக்குவரத்து விதிமீறல்களுக்கான எச்சரிக்கை பத்திரமும் வழங்கப்படும்.

இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் டிரான் அலஸ்,

"பொதுமக்களுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டியவர்கள் பொலிஸ் அதிகாரிகள். அவர்களில் போக்குவரத்து பொலிஸார் பொதுமக்களுடன் மிக நெருக்கமான பணியில் ஈடுபடுகின்றனர் . கடந்த காலங்களில் பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் இடையே இடைவெளி இருந்தது. சமீபகாலமாக தொடங்கப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையால், பொதுமக்கள் மீண்டும் பொலிஸாரோடு நெருக்கமடைந்துள்ளனர். அதன் மூலம் பொலிஸார் மீதான மக்களின் நம்பிக்கை வலுப்பெறுவதாகவும் தெரிகிறது.

## 91 வீதமான குழந்தைகளுக்கு...

தெரிவிக்கும்போதே, கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரமேஷ் பதிரண,

“நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதே இந்த ஆண்டின் முக்கிய எதிர்பார்ப்பாகும். ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மிகவும் தரமான சேவையை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொற்றா நோய்கள் தொடர்பில் இலங்கை பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. 20% இற்கும் அதிகமான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய பிராந்தியத்தில் 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவில் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உள்ள நாடாகவும் இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. உயர் இரத்த அழுத்தம் தொடர்பான சிக்கல்களில் இதயநோய் மற்றும் பக்கவாதம் போன்ற பல நோய்கள் அடங்குகின்றன. மேலும், வேகமாக முதுமையடையும் மக்கள்தொகை கொண்ட நாடென்ற வகையில், நினைவாற்றல் குறைபாடு, கண் நோய்கள், எலும்பு நோய்கள் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, தொற்றாத நோய்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வேகமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் ஆதரவு கிடைத்துள்ள போதிலும், இது தொடர்பாக பொது மக்களின் ஆதரவு இப்பொழுதுள்ளதை விடவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தற்போது அதிகரித்து வரும் தட்டம்மை நோயைத் தடுக்க பல்வேறு விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம். கடந்த சில வாரங்களில், 91% குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை ஏற்ற முடிந்தது.

அத்துடன், தற்போதுள்ள மருந்துப் பற்றாக்குறையை போக்குவதற்கு பெருமளவிலான அத்தியாவசிய மருந்துகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மருந்து தட்டுப்பாடு படிப்படியாக குறைந்து வருகிறது என்றே கூற வேண்டும். எதிர்காலத்தில், மருத்துவ விநியோகத் துறையையும், கொள்முதல் செயல்முறையையும் வெளிப்படையானதாக மாற்ற ஒன்லைன் முறையைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக ஏற்கனவே மொரட்டுவை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் கணனி துறைகளுடன் சுகாதார அமைச்சு கலந்துரையாடி வருவதாகவும் அமைச்சர் ரமேஷ் பதிரண மேலும் தெரிவித்தார்.

## மரக்கறிகளின் விலைகள்...

ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்தையில் மீனின் விலை குறைந்ததால் காய்கறிகளை உண்பதில் மக்கள் ஆர்வம் செலுத்தவில்லை. இதனாலே, மரக்கறிகளின் விலை குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் பணிபுரியும் விவசாயிகளின் வயல்களில் கரட் போன்ற விலை உயர்ந்த மரக்கறிகள் காணப்படுகின்றன. இதனால் விலைகள் அதிகரிக்கப்பட்டதாகக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொருளாதார மையத்தில் செயற்படும் ஒரு அமைப்பின் தீர்மானத்தின்படி விலை நிர்ணயிக்கப்பட்டது. எந்த மாஃபியாவும் இதில் செயற்படவில்லை. வெளிநாட்டிலிருந்து காய்கறிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்தால், விவசாயிகள், பொருளாதார மையத்தின் அதிகாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் நாங்களும் முதலில் தெருவில் இறங்குவோம். விவசாயத்துறை அதிகாரிகள் இலக்குகளை நிறைவேற்றுகிறார்களா என்பதை வட்டார அலுவலர்கள் மூலம் கண்டறிய வேண்டும். உரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்து விவசாயத்தை வளர்ச்சி அடையச் செய்யுமாறு அமைச்சரை கேட்டுக் கொள்கிறோம். நுவரெலியா விவசாயிகளுக்கு வெளிநாட்டு தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிப்பது மிகவும் அவசியமானதாகும். இதன் மூலம் விவசாய பொருளாதாரத்தை போட்டித்தன்மையுடன் வளர்க்க முடியும் எனவும் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

## ராமர் கோயில் கருவறை...

அயோத்தி வந்துள்ளனர். அத்தோடு, உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் அயோத்தி ராமனை தரிசிக்க வந்துள்ளனர்.ராமர் கோயில் கருவறை மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டது.

திங்கட்கிழமை காலை 11.30 மணி அளவில் பிரதமர் நரேந்திர மோடி அயோத்தி ராமர் கோயிலுக்கு வருகை தந்தார். பட்டாடைகளை பாரம்பரிய முறைப்படி அணிந்து வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட ராமபிரான் அயோத்தி ராமர் கோயில் கருவறைக்கு பிரதமர் நரேந்திர மோடி, ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத், உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்தி பென் படேல், முதல்வர் யோகி ஆதித்யாநாத் உள்ளிட்டோர் அனுமதிக்கப்பட்டனர்.

வண்ண வண்ண மலர்களாலும், கண்களைப் பறிக்கும் விலை உயர்ந்த நகைகளாலும் குழந்தை ராமர் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு காட்சி தந்தார். இதனைத் தொடர்ந்து பிராண பிரதிஷ்டை விழா தொடங்கியது.

கோயில் அர்ச்சகர் வழிகாட்டுதலின் கீழ் பிரதமர் மோடி, பல்வேறு பூஜைகளை செய்தார். குழந்தை ராமரை தரிசித்த பிரதமர் உள்ளிட்டோர் நீண்ட நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பிரதிஷ்டைக்கு முன்பு, புஷ்பம், பழம், மூலிகைகளைக் கொண்டு ஸ்ரீபால ராமர் சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. கோயில் முற்றம் 81 கலச மூலிகை நீரால் தூய்மைப்படுத்தப்பட்டது.

பிறகு, பல்வேறு புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட 125 கலச புனித நீர் சிலை மீது ஊற்றப்பட்டது. அதன் பிறகு மகாபூஜை நடத்தி உரிய இடத்தில் சிலை நிறுவப்பட்டது. நிகழ்வின் நிறைவாக தெய்வீக ஆற்றல், பிராணன் சிலைக்கு மாற்றப்பட்டது.

இந்த நிகழ்வானது, மந்திரங்கள் ஓதப்படுவதன் மூலமாகவும் முத்திரைகள் மூலமாகவும் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. பால ராமர் சிலைக்கு முதல்முறையாக பிரதமர் மோடி தீபாராதனை காட்டி வழிபாடு நடத்தினார். ராமர் சிலைக்கு தேங்காய், பழங்கள் படைத்து பிரதமர் மோடி வழிபாடு செய்தார்.

மலர்கள், தங்க ஆபரணங்களால் பால ராமர் சிலை அலங்கரிக்கப்பட்டுள்ளது.ராமர் கோயில் கருவறை மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டது. அயோத்தியில் ராமர் கோயில் கருவறை திரைச்சீலை விலக்கப்பட்டது.

## இலங்கை தமிழர்களுடன்...

தெரிவிக்கையிலேயே அவர் குறிப்பிட்டுள்ளார்.பொங்கல் நிகழ்வில் உரையாற்றிய கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ:

1983 இல், இலங்கையில் வன்முறைகள் ஆரம்பித்த காலத்தில் அப்போது ஆட்சியில் இருந்த லிபரல் கட்சி 1,800 இலங்கை தமிழர்களை கனடாவில் குடியேற்றியது.

இந்த தொகை கடந்த பல தசாப்தங்களில் அதிகரித்து இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடாக கனடா மாறியுள்ளது.

அத்துடன் கனடாவின் வளர்ச்சிக்கு தமிழர்களின் பங்களிப்பு வியக்கத்தக்களவில் உள்ளது . இதன் காரணமாகவே 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தை தமிழர் வரலாற்று மாதமாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தது. இந்நிலையில் இலங்கை தமிழர்களின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கனடா தொடர்ந்தும் சர்வதேச மனித உரிமைகள் உள்ளிட்ட ஏனைய அமைப்புக்களுடன் செயற்பட்டு வருகிறது. வேறு எந்த நாடுகளும் நடைமுறைப்படுத்தாத வகையில், இலங்கை தமிழர்களின் மனித உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கனடா தடைவிதித்துள்ளது.

தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் எனவும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதியளித்துள்ளார்.

## தொலைபேசி அழைப்புக்களில்...

பொலிஸ் நிலையங்களுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்

முல்லேரியா மற்றும் நவகமுவ பிரதேசங்களில் உள்ள ஒழுங்கை வீடுகளை குறிவைத்து இந்த அழைப்புகள் வந்துள்ளன. இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் மற்ற பகுதிகளுக்கும் இது போன்ற அழைப்புகளை மேற்கொள்ளும் ஆபத்துகள் உள்ளன. பொலிஸ் அதிகாரிகளாக வேடமிட்டு ஆள்மாறாட்டம் செய்பவர்கள், இச் சம்பவங்களில் ஈடுபட்டதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். குற்றச் செயல்கள் மற்றும் தொடரும் பொலிஸ் விசாரணைகள், ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர் சஹாரான் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் கைது செய்யப்படலாமென,பொதுமக்களை இக்கும்பல் அச்சுறுத்துகிறது. இதுபோன்ற அழைப்புகளைப் பெற்ற பல குடியிருப்பாளர்கள் மோசடி செய்பவர்களுக்கு ez cash மூலம் பணத்தை அனுப்பியுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டு, சந்தேகநபர்களை அடையாளம் காண விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## O/L விண்ணப்பங்கள்...

விண்ணப்பதாரிகளும் பாடசாலை அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையிலும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலையில் விண்ணப்பிக்க வேண்டும்.

அரச பாடசாலை அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையிலிருந்து விலகி, விடுகைப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே இப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

இவ்வாண்டு தொடக்கம் O/L பரீட்சைக்காக விண்ணப்பிக்கவுள்ள சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடமும் தேசிய அடையாள அட்டை இருப்பது கட்டாயமானதாகும். தேசிய அட்டை இல்லாத 15 வயதுக்கு குறைவாக உள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைக்காக தோற்றுவதற்கு எதிர்ப்பார்ப்பின், பரீட்சைத் திணைக்களத்துக்கு வருகை தருவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic என்பவற்றுக்குள் நுழைந்து உரிய அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து அதற்கமைய பிழையின்றி விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

## தமிழரசுக் கட்சியின் தலைவர் ...

இலங்கை தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் ஸ்ரீதரன், கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

## IMF இன், இரண்டாவது...

சொந்த இலாபமாக மாற்ற சிலர் செயற்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க தூதுவர்...

இலங்கையர்களின் மீதான தனது மதிப்பை அதிகரித்துள்ளதாகவும் அமெரிக்க தூதுவர் தனது உத்தியோகபூர்வ X கணக்கில் பதிவிட்டுள்ளார்.

## IMF உடன் இணைந்து...

நிறுவனங்களை தனியார் மயமாக்கும் சரத்துக்களில் திருத்தங்களை செய்ய தேசிய மக்கள் சக்தி விரும்புவதாகவும் விஜித்த ஹேரத் எம்பி கூறியுள்ளார். இதேவேளை, தமது கட்சிக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கவலையடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## கொழும்பு, கண்டி, யாழில்...

தெரிவித்துள்ளார். இதுபற்றித் தெரிவித்த அவர்; தற்போது யாழ்ப்பாணத்தில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால், இந்த ஆண்டில் இதுவரை 7 ஆயிரத்து 299 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 401 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில், டெங்கு நோயினால் இதுவரை மூவர் உயிரிழந்துள் ளதாகவும் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அரிசி இறக்குமதிக்கான...

பணிக்காக கட்டப்பட்ட அரிசி சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான இடம் அழிக்கப்பட்டுள்ளது.

பல கோடி ரூபா செலவில் புல்னேவ அரிசி பதப்படுத்தும் நிலையம் நிறுவப்பட்டது.இதன் பின்னர், பெருமளவிலான மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். எனினும் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து அரிசி பதப்படுத்தும் இந்த இடம், பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்டு கிடப்பதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கட்டடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ள இவ்விடம், தற்போது கொசுக்கள் உற்பத்தியாகும் இடமாகவும், கால்நடைகளின் இருப்பிடமாகவும் மாறியுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# இறை அழைப்புக்கு பதில் கொடுக்கும் வாழ்வு



இறை அழைத்ததலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தினமாக பொதுக்காலத்தின் மூன்றாம் வார ஆரம்பமான கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்பட்டது.

வரலாற்றை நாம் பார்க்கும் போது இறைவன் புதரிலிருந்து மோயீசனை அழைத்தார். அதே இறைவன்.மெல்லிய காற்றில் எலியாசை அழைத்தார். இடியின் ஒலியில் பவுலை அழைத்தார். கடலில் வலை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்த அந்திரேயா, பேதுரு ஆகியோரை இயேசு கடலிலிருந்து அழைத்தார் .

மீன்பிடித்துக் கொண்டிருந்த சாதாரண மக்களாகிய இவர்களை அழைத்தவுடன் அவர்களும் உடனே தம் படகையும், வலைகளையும் விட்டு முன்பின் தெரியாத இயேசுவைப் பின் தொடர்ந்தார்கள் என்பதாக பரிசுத்த வேதாகமம் நமக்கு கற்பிக்கின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அலெக்ஸ், ஷிலா என்ற இரு இளம் மருத்துவர்கள் மணவாழ்க்கைக்கு ஒப்பந்தம் செய்து கணவன் மனைவியாகத் தங்களை அர்ப்பணிக்க முடிவெடுத்தார்கள், அவர்களது பெற்றோர்கள் அந்த திருமணத்தை ஆடம்பரமாகக் கொண்டாடத் திட்டமிட்டனர்.

பலரும் இந்த ஆடம்பரத் திருமணத்திற்காக ஆவலோடு காத்திருந்தனர். ஆனால் திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக மருத்துவத் துறையிலிருந்து அவர்களுக்கு ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

40 மருத்துவர்கள் கொண்ட ஒரு குழு மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க மக்களுக்கு மருத்துவப் பணி புரிய ஆறு மாதம் அங்கு தங்கி பணி புரிய வேண்டும். அதில் இவர்கள் இருவர் பெயரும் இடம் பெற்றன. எனவே ஆடம்பரத் திருமணத்தை இரத்து செய்து தாங்கள் பணி புரிந்த மருத்துவமனை சிற்றாலயத்தில் அருட்தந்தை ஒருவரால் எளிமையாகத் திருமணம் நிறைவேற்றி, குறிப்பிட்ட திகதியில் ஆபிரிக்கா புறப்பட்டார்கள் அந்த இளம் தம்பதி.

தற்பெருமை, சுய சார்பு எண்ணங்கள், பொறாமை, போட்டி மனப்பான்மை போன்ற தீய வலைகளைக் கிழித்துவிட்டு, பகிர்வு, பாசம், தியாகம், தாழ்ச்சி போன்ற வலைக்குள் நாம் நுழையும் போதுதான் இயேசுவை நாம் பற்றிக்கொள்ள முடியும். இவ்வாறு தான் சீடர்கள் இயேசுவைப் பின் தொடர்ந்தார்கள்.

உள் மன மாற்றம் பெற்று சாதாரண மீனவர்களாக கடலில் இருந்த மீன்களை கரையிலே கொண்டு சேர்த்தவர்கள், பாவத்தால் இறந்த மனிதர்களை, உயிருள்ள வாழ்வுக்குக் கொண்டு வர உயர்த்தப்பட்டார்கள். மனமாற்றம் அடைந்தார்கள். இதனால் கடல் அல்ல எங்கள் வாழ்வு. கடவுள்தான் எங்கள் வாழ்வின் மையம் என்பதை உணர்ந்தார்கள். இறைவன் ஒருவரே நிலையானவர். எதை எதைப் பெற வேண்டும் எனத் திட்டமிடாதீர்கள். மாறாக எதை எதை இழக்க வேண்டும் என்று சிந்தித்து வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இறைவனுடன் பயணிப்பதே சிறந்தது.

**முனைவர் அருட் பணி அருள்**

# திருப்பாலத்துவ மறைப்பறப்பு ஞாயிறு

## திருச்சபை எதிர்வரும் 28இல் சிறப்பிக்கின்றது



திருப்பாலத்துவ சபை ஞாயிறு சிறப்பு தினத்தை கத்தோலிக்கத் திருச்சபை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கின்றது.

சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் என இயேசு அழைப்பு விடுத்தார். நாம் அனைவரும் சிறு பிள்ளைகளை போன்று கள்ளம் கபடமற்ற மனநிலை படைத்தவர்களாக வாழ்வது தொடர்பில் இயேசு நம் அனைவருக்கும் அறிவுறுத்துகின்றார்.

அதற்கிணங்க சிறுவர்களை மறை தூதுப் பணியில் ஊக்குவிக்கும் நாளாக திருப்பாலத்துவ ஞாயிறு தினம் வருடா வருடம் சிறப்பிக்கப்படுகின்றது.

இலங்கையில் திருப்பாலத்துவ சபையானது 60 வருடங்களாக இலை மறைகாயாக செயற்பட்டிருந்தது. இச்சபையானது கத்தோலிக்கத் தனியார் பாடசாலைகளில் மட்டுமே செயற்பட்டு வந்தது.

1986 ஆம் ஆண்டு தாய்லாந்தில் பெங்கொக் நகரில் நடைபெற்ற உலகளாவிய திருப்பாலர் செயற்குழு கூட்டத்திற்குப் பின் இச்சபையினை இலங்கையில் நமது நாட்டுக்கு பொருத்தமான விதத்தில் நடைமுறைப்படுத்த முடிவெடுத்தனர்.

அதனடிப்படையில் 1987 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்த அப்போதைய திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குனராக செயற்பட்டு வந்த தற்போதைய பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் முன்னெடுப்புடன் அநுராதபுரம் மறைமாவட்டத்தின் ஹிங்குராங்கொட பங்கில் வளவாளர்களுக்கான ஆரம்பப் பயிற்சி பாசறை நடத்தப்பட்டது.

அதன் பின் அப்போது இன்றும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் திருப்பாலத்துவ சபைக்கு அத்திவாரமிடப்பட்டது.

இன்று இலங்கையிலுள்ள அனைத்து மறை மாவட்டங்களிலும் உள்ள சிறுவர்களை இயேசுவின் சின்ன மறைத்தூதராக்கும் நோக்குடன் இச்சபையானது சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் சிறார்களை விசேட விதமாக இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாம் பிரார்த்திப்போம்.

**எல்.எஸ்.**




# செபத்திற்கான ஜூபிலி ஆண்டு: பலவிதத்திலும் பாதிக்கப்பட்டோர் நலனுக்காக விசேடமாக செபிப்போம்

## திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு



தனிப்பட்ட வாழ்க்கை, திருஅவை மற்றும் உலக வாழ்வில் செபத்தின் தேவை மற்றும் வல்லமையை உணர கொடுக்கப்பட்ட இந்த செப ஆண்டில் நமக்கு உதவ நற்செய்தி அறிவிப்புப் பேராயம் முன்னிலையில் இருந்து செயற்படும் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இறைஅருளின் நிகழ்வான ஜூபிலி ஆண்டில் கடவுள் நம்பிக்கையின் ஆற்றலை அதிகப்படுத்த சிறப்பாக செபிப்போம் என்றும், செபத்தின் மதிப்பு, தேவை மற்றும் வல்லமையை இந்த ஜூபிலி ஆண்டில் நாம் கண்டறிவதற்காக செப ஆண்டு ஆரம்பமாகின்றது என்றும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

ஜனவரி 21 கடந்த ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பேராலய வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய செப உரையின் இறுதியிலேயே அவர் இவ்வாறு எடுத்துரைத்தார்.

தனிப்பட்ட வாழ்க்கைதிருஅவை மற்றும் உலக வாழ்வில் செபத்தின் தேவை மற்றும் வல்லமையை உணர கொடுக்கப்பட்ட இந்த செப ஆண்டில் நமக்கு உதவ நற்செய்தி அறிவிப்புப் பேராயம் முன்னிலையில் இருந்து செயற்படும் என்றும் தெரிவித்த திருத்தந்தை, இந் நாட்களில் நாம் குறிப்பாக, கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக செபிப்பது அவசியமாகும்.

உக்ரேன், இஸ்ரேல், பலஸ்தீனம் மற்றும் உலகின் பல பகுதிகளிலும் வாழும் மக்களின் அமைதிக்காக இறைவனை நோக்கி செபிப்பதில் நாம் சோர்வடையக் கூடாது. பற்றாக்குறையால் பாதிக்கப்படும் பலவீனமானவர்கள், காயமடைந்த மற்றும் கொல்லப்பட்ட சிறார், உணர்வுகள், கனவுகள், மற்றும் எதிர்காலத்தை இழந்தவர்கள் என அனைவரையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு அமைதி கிடைக்க செபிக்க வேண்டியது நமது பொறுப்பு.

மேலும் ஹைட்டியில், கடத்தப்பட்ட ஆறு அருள்சகோதரிகள் மற்றும் மக்களையும் நினைவு கூர்ந்து அன்பான மக்கள் மீது துன்பத்தை ஏற்படுத்தும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், கடத்தப்பட்ட அனைவரும் விடுவிக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதற்காக அனைவரும் செபிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

**மெரினா ராஜ்**

# இலங்கையின் திருத்தூதர் புனிதர் ஜோசப் வாஸ் திருவிழா



கண்டி மறை மாவட்டத்தின் பொகவந்தலாவை புனித மரியாள் ஆலயத்தில் திருவிழா தினத்தன்று வடிவமைக்கப்பட்டிருந்த புனித ஜோசப் வாஸ் திருத்தூதரின் திருச்சுரூபம். (படம்: ஜொய்ஸன் சிங்கராயர்)

கத்தோலிக்கத் திருச்சபையானது கடந்த 16ஆம் திகதி இலங்கையின் புனிதராம் திருத்துதர் ஜோசப் வாஸ் முனீந்திரருக்கு திருவிழா வெடுத்து மகிழ்ந்தது.

வேத கலாபனை காலத்தில் பெரும் தியாகம் மற்றும் அர்ப்பணிப்புடன் இலங்கையில் மறை பணியாற்றிய புனித ஜோசப் வாஸ் முனீந்திரர் இலங்கை மக்கள் மனதில் என்றும் நிலைத்து வாழ்பவர்.

இந்தியாவின் கோவாவில் 1651 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பிறந்த புனித ஜோசப் வாஸ் இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் டச்சுக்காரர்களால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளையில் கத்தோலிக்க மக்களுக்கு சேவை செய்வதற்காக இலங்கை வந்தார்.

அவர் இலங்கையின் வடக்குப் பிராந்தியங்களில் "யோசேவாஸ் முனீந்திரர்" என அழைக்கப்பட்டார். பிற்காலத்தில் இவர் கண்டி இராச்சியத்தில் தங்கியிருந்து கத்தோலிக்க திருச்சபையை மீளமைத்தார்.

ஜோசப் வாஸ் அடிகளார் 1687ம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.அப்போது இலங்கையில் ஆட்சியில் இருந்த டச்சுக்காரர்கள் கொல்வினிசத்தைப் பின் பற்றியவர்கள்.

அந்த வகையில் அவர்கள் கத்தோலிக்க மக்களையும் மறை பணியாளர்களையும் குருக்களையும் கொலை செய்தனர். ஆலயங்கள் மற்றும் கிறிஸ்தவ பாடசாலைகளை தரைமட்டமாக்கினர்.

இதனால் பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த புனித ஜோசப் வாஸ் அடிகளாருக்கு சில்லாலையூர் மக்கள் புகலிடம் வழங்கினர். அவர் அங்கேயே தங்கி சில்லாலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கத்தோலிக்க மக்களுக்கு சேவையாற்றினார். அவர் மாறுவேடத்தில் நடை பயணமாக 24 ஆண்டுகளாகப் வன்னி, புத்தளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்று மறை தூதுப் பணியில் ஈடுபட்டார்.

1692ம் ஆண்டு கண்டிக்குச் சென்ற ஜோசப் வாஸ் அடிகளார் அங்கு கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் ஸ்தாபிக்கப் பெருமுயற்சிகளை மேற்கொண்டார். இதனால் அவர் அங்கு இரண்டாண்டுகள் சிறையிலும் இருக்க நேரிட்டது.

கண்டியிலிருந்தே தனது சேவைஎ்யத் தொடர்ந்த வாஸ் அடிகளார் 1696ம் ஆண்டு, இலங்கையின் (VicarGeneral) பதவியைப் பெற்றார்.

ஜோசப் வாஸ் அடிகளார் கண்டியில் பணி செய்த போது அப்பகுதியில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் உணவு இல்லாமலும் குறிப்பாக மழையில்லாமல் வரட்சியினாலும் கஷ்டப்பட்டார்கள். அதன் போது குறுநில மன்னன் விமலதர்ம சூரிய அடிகளாரை அழைத்து பஞ்சம் நீங்க ஜெபம் செய்யச் சொன்னார். அவர் செபித்து சில மணித்தியாலங்களில் பெரும் மழை பெய்து மக்களையும் மன்னனையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

இதன்போது பெரிதும் மகிழ்ந்த அந்த மன்னர் அவர் தடையின்றி நற்செய்தி அறிவிக்க வழி வகுத்தார். அந்த காலத்தில் ஜோசப் வாஸ் அடிகளார் பல அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்தார் என வரலாறு கூறுகின்றது.

1710ம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி பரிசுத்த வியாகுலமாதா ஆலய வளவில் சிறு ஓலையில் அமைக்கப்பட்டிருந்த ஆலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கும்போது அவர் காட்டிக் கொடுக்கப்பட்டார்.

அதன் போது அவர் மரத்தில் கட்டி வைத்து அடிக்கப்பட்டார். 1711ம் ஆண்டில் அவர் கண்டியில் இறைபதம் அடைந்தார்.

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பணியாற்றிய அவர் பரிசுத்த வேதாகமத்தை தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மொழிபெயர்த்தார். அவ்விரு மொழிகளிலும் மக்கள் கடவுளை வழிபடுவதற்கான நூல்களையும் இயற்றினார்.

மேலும், கிறிஸ்தவ விசுவாசத்தை அவர் இலங்கையில் பரப்புகையில் அந்தந்த மக்களின் பண்பாட்டு கலாசார மதிப்பீடுகளை மதிக்க வேண்டும் என்பதிலும் அவர் கவனமாயிருந்தார். மொழி, இன வேறுபாடுகளைக் களைந்து கடவுள் நம்பிக்கையில் மக்கள் வளர வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது.

அனைத்து மக்களுக்கும் அவர் ஆற்றிய அரும்பணிகளுக்காக இலங்கையின் திருத்தூதர் என அழைக்கப்பட்டார்.

வழக்கமாக புனிதர் பட்டம் வழங்குவதற்கு திருச்சபைக்கு தேவைப்படும் இரண்டாம் புதுமையினையும் வேண்டாம் என தவிர்த்து பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் இலங்கைக்கு வருகை தந்து ஜோசப் வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கி கௌரவித்தார்.

இலங்கையில் புனிதர் பட்டம் பெற்ற முதல் புனிதர் இவரேயாவார். கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்ற இந்த பிரமாண்டமான பட்டமளிப்பு நிகழ்வில் திருத்தந்தையிடம் ஆசீர் பெறுவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரளாகக் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**எல். செல்வா**

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

# சீரற்ற காலநிலையினால் அழிவடைந்த உணவுப் பயிர்ச்செய்கைக்கு நஷ்டஈடு

நாட்டில் கடந்த சில மாதங்களாக மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவியது. இக்காலநிலையின் விளைவாக பல பிரதேசங்களிலும் வெள்ள நிலையும் மண்சரிவுகளும் அவ்வப்போது ஏற்பட்டன. இச்சீரற்ற காலநிலையின் விளைவாக மக்களது இயல்புநிலையும் பெரிதும் பாதிக்கப்பட்டது. சில பிரதேசங்களில் மக்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயரக்கூடிய துர்ப்பாக்கிய நிலைமையும் கூட ஏற்பட்டிருந்தது.

இதேவேளை இச்சீரற்ற காலநிலையின் காரணமாக நாட்டின் உணவுப் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. பெரும்பாலான பயிர்ச்செய்கைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் உள்ளன. இவை சாதாரணமாகவோ குறைத்து மதிப்பிடவோ முடியாத அளவுக்குக் காணப்படுகின்றன. இப்பாதிப்பின் விளைவாக உள்நாட்டு சந்தையின் தேவைக்கு ஏற்ப வழமை போன்று மரக்கறி வகைகளை வழங்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அதனால் சந்தையில் மரக்கறி வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மரக்கறி வகைகளின் விலைகள் சந்தையில் கடந்த சில வாரங்களாக பெரிதும் அதிகரித்துக் காணப்படுகின்றன. அதன் விளைவாக மரக்கறி வகைகளை சாதாரண மக்கள் கொள்வனவு செய்து நுகர முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம் இச்சீரற்ற காலநிலையினால் சேதமடைந்தும் அழிவடைந்தும் உள்ள உணவுப் பயிர்ச்செய்கைகளுக்கு விவசாயிகள் நஷ்டஈட்டை எதிர்பார்த்தவர்களாக உள்ளனர். அதற்கான கோரிக்கையும் விவசாயிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் பெரும்பாலான விவசாயிகள் கடன் பெற்று விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பது வழமையாகும். ஆனால் கடந்த சீரற்ற காலநிலையால் உணவுப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள சேதங்களும் பாதிப்புக்களும் விவசாயிகளை பெரிதும் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கியுள்ளன. அதனால் அவர்கள் மீண்டும் விவசாயப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவென ஊக்குவிப்புக்களைக் குறிப்பாக நஷ்டஈட்டை எதிர்பார்த்தவர்களாக உள்ளனர்.

இந்தச் சூழலில், சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்படைந்துள்ள உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையை துரிதமாக மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் பரவலாக உணரப்பட்டு இருக்கின்றது. இல்லாவிடில் குறைந்த வருமானம் பெறும் சாதாரண மக்களால் மரக்கறி வகைகளை நுகர முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு விடக்கூடிய அபாயமும் நிலவுகிறது.

இந்த விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் உணவுப் பயிர்ச்செய்கையை விரைவாக மீளக்கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. அதன் ஊடாக சாதாரண மக்களுக்கும் நியாய விலையில் மரக்கறி வகைகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய சூழலை உருவாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

'நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கப் பெற வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமாகும். அதற்கு ஏற்ப அவர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இந்தப் பின்னணியில் பொருளாதார நெருக்கடி நிலவிய காலத்தில் மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் தற்போது பெரிதும் நீங்கியுள்ளன.

அதேசமயம் கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையினால் பாதிப்படைந்துள்ள விவசாய பயிர்ச்செய்கைகளுக்கு நஷ்டஈடு வழங்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளதோடு விரைவில் நஷ்டஈடு வழங்கப்படும் என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்திருக்கின்றார்.

உண்மையில் இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். சீரற்ற காலநிலையால் சேதமடைந்தும் அழிவடைந்தும் உள்ள உணவுப் பயிர்ச்செய்கைகளுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பதன் மூலம் இச்செய்கையை மீண்டும் விரைவாகவும் துரிதமாகவும் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். அதன் ஊடாக மரக்கறி வகைகளின் விலைகள் மீண்டும் குறைவடைய வழிவகுக்கும். மக்களின் தேவையும் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

அதன் காரணத்தினால் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து மரக்கறிப் பயிர்ச்செய்கையை மீளக்கட்டியெழுப்பவென முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் நாட்டில் நிச்சயம் ஒரு முதலீடாகவே அமையும். அதற்கு இப்பயிர்ச்செய்கை அழிவுகளுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டு கொடுப்பனவு பாரிய பங்களிப்பு நல்கும். அதன் விளைவாக விவசாயிகள் இப்பயிர்ச்செய்கையில் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் ஈடுபடக்கூடிய சூழல் உருவாகும். அதனால் சீரற்ற காலநிலையால் சேதமடைந்தும் பாதிப்படைந்தும் உள்ள உணவுப் பயிர்ச்செய்கையைத் துரிதமாக மீளக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# தினகரன் முன்னாள் ஆசிரியர் அமரர் இ.சிவகுருநாதனை கௌரவித்து அவுஸ்திரேலிய தலைநகரில் நூல் வெளியீடு

இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் வெளியிடப்பட்டது. கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவரை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் சிறப்புற இவ்விழா நடைபெற்றது.

கலாசூரி இ.சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை(20/1/24) மாலை 4.30 மணிக்கு அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெற்றது.

இலக்கிய ஆர்வலரும், எழுத்தாளருமான க. திருவருள் வள்ளல் தலைமையில் கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் விழா சிறப்புற நடைபெற்றது.

நூல் வெளியீட்டு விழாவில் மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார். அதன் பின்னர் நிமலன் கார்த்திகேயன், இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதனை பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

அத்துடன் சிறப்பு அதிதியாக இலங்கை அரசின் உயர்ஸ்தானிகர் திருமதி சித்ராங்கனி வாகிஷ்வரா இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி தொடர்பான சிறப்புரையை எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான சுந்தரதாஸ் ஆற்றினார். அதன் பின்னர் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார். அத்துடன் இளம் மாணவனான அரஜூன் விஷ்ணு 'தனது வாழ்வியல் வழிகாட்டி' எனும் பொருளில் தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரை நினைவு கூர்ந்தார்.




இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் சின்னத்துரை மயூரன் வழங்கிய நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெற்றது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவரை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் சிறப்புற இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.








# யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கிறித்தவ கலை உலகங்கள்: பன்னாட்டுக் கருத்தரங்கம்

யாழ் பல்கலைக்கழக கலைப் பீட நுண்கலைத்துறையும் தென்னிந்தியா – தமிழ்நாடு பாளையங்கோட்டை தூயசவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறை மற்றும் ஆய்வு மையமும் இணைந்து 'தமிழ்க் கிறித்தவக் கலை உலகங்கள்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கினை இம்மாதம் 29 முதல் 31 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இது தொடர்பாகக் கருத்தரங்கு ஒழுங்கமைப்பாளர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்ப்பண்பாட்டிற்கு கிறிஸ்தவக் கலைகளின் பங்களிப்பும் கிறிஸ்தவத்திற்கு தமிழ் கலைவடிவங்களின் பங்களிப்பும் தமிழ்ப்பண்பாட்டின் பன்மைப் பரிமாணங்களைப் புரிந்து கொள்ளவதில் முக்கியமானவை. அந்தவகையில், நுண்கலைத்துறையின் ஐந்தாவது கருத்தரங்கானது இதுவரை அதிகம் பேசப்படாத இவ்விடயத்தில் கவனமெடுக்கிறது. காலனிய காலகட்டத்திற்கு முன்பிருந்தே பாக்கு நீரிணையின் இருபக்கமும் நடைபெற்று வந்த கலைச் செயற்பாடு சார்ந்த ஊடாட்டங்கள் கிறித்தவத்தின் தாக்கத்தினால் புதிய பரிமாணங்களை அடைந்தன.

தென்னிந்தியா – இலங்கை ஆகிய இருபகுதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் இப்பண்பாட்டுப் பரிமாற்றங்கள் – எடுத்துக்காட்டாக சிற்பம், ஓவியம், கட்டடம், இசை, நாடகம் போன்ற செயற்பாடுகள் – முறையான ஆய்வுக் கவனத்தைப் பெறவில்லை. இப்பின்னணியில், பாக்கு நீரிணையின் இருபக்கமுமுள்ள தமிழ்ச் சமூகங்களில் கிறித்தவ சமயம் சார்ந்த ஊடாட்டங்களின் மூலம் கலைச் செயற்பாடுகளில் நிகழ்ந்த பரிமாற்றங்களை, பரிமாணங்களை ஆய்வுக்குட்படுத்தும் நோக்கில் இக்கருத்தரங்கம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.




எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நிகழும் அங்குரார்ப்பண நிகழ்வில் அருட்தந்தை ஜெயசீலன் 'தமிழ் கிறித்தவக் கலைகள்' என்ற தலைப்பிலும், மொரட்டுவை பல்கலைக்கழக விரிவுரையாளரும் கட்டடக்கலைஞருமான சாகர ஜெயசிங்க 'வட இலங்கையின் 19ஆம் நூற்றாண்டுக் கட்டடக் கலையையும் கலையையும் ஆராய்தல்' என்ற தலைப்பிலும் திறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியில் கேராளவில் தமிழ்மொழியில் ஆற்றப்படும் கத்தோலிக்க ஆற்றுகை வடிவம் பற்றிய ஆவணப்படமும் திரையிடப்படுகிறது. இந்நிகழ்விற்கு முன்னராக, அதேதினம் மாலை 3.00 மணிக்கு 'பண்பாட்டு ஒட்டு' என்ற தலைப்பிலமைந்த வட இலங்கைத் தேவாலயங்கள் பற்றிய ஒரு காட்சியும் நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் எட்டு அமர்வுகளில் ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன. கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிகளிலும்; பிற அமர்வுகளிலும் அனைத்துக் கலை ஆர்வலர்களையும் ஆய்வாளர்களையும் மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். 30ஆம் மற்றும் 31ஆம் திகதி அமர்வுகளுக்கான முன் பதிவுகளை நுண்கலைத்துறையில் மேற்கோள்ளலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் இவ்வாண்டு தமது பொன்விழாவைக் கொண்டாடுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பக்திப்பரவச வெள்ளத்துடன் நேற்று அயோத்தி இராமர் கோயில் திறப்புவிழா

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் இராமர் கோயில் திறப்புவிழா பக்தி பரவச பெருவெள்ளத்துடன் நேற்று நடைபெற்றது. இராமர் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமர் சிலைக்கு பிரதமர் நரேந்திர மோடி முதல் பூசை நடத்தினார்.

அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழாவை முன்னிட்டு அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், துறைசார் நட்சத்திரங்கள் பங்கேற்றனர். பிரதமர் மோடி, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் உள்ளிட்டோருக்கு அயோத்தி இராமர் கோயில் வடிவத்தை நினைவுப் பரிசாக வழங்கினார் உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்.

அயோத்தி இராமர் கோயில் வளாகப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். இப்பொதுக் கூட்டத்தில் சுமார் 7,000 பேர் பங்கேற்றனர். அயோத்தி இராமர் கோயிலில் பிரதிஷ்டை வழிபாட்டுக்கு பின்னர் சாதுக்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றார் பிரதமர் மோடி. சாதுக்கள் புடைசூழ பிரதமர் மோடிக்கு ஆசீர்வாதம் வழங்கினர்.



அயோத்தியில் பிரமாண்டமாகக் கட்டப்பட்ட இராமர் கோயிலில் பால இராமர் சிலையை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வுகள் நண்பகலுக்கு சற்றுப் பின்னர் நிறைவடைந்தன.

அயோத்தி இராமர் கோயில் கருவறை பால இராமர் பிரதிஷ்டைக்குப் பின்னர் பொதுமக்கள் வழிபாட்டுக்காக திறக்கப்பட்டது. பால ராமர் பிரதிஷ்டையை தொடர்ந்து பிரதமர் மோடி முதலில் தீப ஆராதனை காட்டி வழிபாடு நடத்தினார். அதன் பின்னர் இராமர் கோயில் கருவறை மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது; முன்னதாக இராமர் கோயில் கருவறையில் பால இராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிராண பிரதிஷ்டை சிறப்புப் பூஜையில் பிரதமர் மோடி பங்கேற்றார்

பால இராமர் சிலை மலர்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிலை திறப்பை தொடர்ந்து பிரதமர் மோடி பூஜைகள் செய்தார். இராம பஜனை பாடல்கள் அப்போது பாடப்பட்டன. இராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட போது இராணுவ ஹெலிகொப்டர்கள் பூமழை தூவின.

பிரதமர் மோடி, உ.பி. ஆளுநர் ஆனந்திபென் படேல், உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் உள்ளிட்டோர் சிறப்பு பூஜை நடத்தினர். முன்னதாக பால இராமர் சிலைக்கு சக்தியூட்டும் பூஜை நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

# டயலொக் மேலதிக Data மற்றும் Data Roll Over; அடுத்த கட்டத்தில் Home Broadband அனுபவம்

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, பாவனையாளர்களின் வீட்டு இணைய பாவனைக்கு ஏற்றாற் போல் செலுத்தும் கட்டணத்திற்கு நியாயமான ஒப்பில்லா மதிப்பை அளிக்கும் வகையில் தனது Home WiFi பிற்கொடுப்பனவு பிளான்களை புதுப்பித்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட இந்த பிற்கொடுப்பனவு பிளான்களில் வாடிக்கையாளர்களுக்கு Data RollOver வசதி தரப்பட்டுள்ளது. இலங்கை Home WiFi சேவைகளில் இவ்வசதி தரப்படுவது இதுவே முதன் முறையாகும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தாம் பயன்படுத்தாத dataவை அடுத்த மாத data வுடன் பயன்படுத்த முடியும்.

Dialog Home Broadband வாடிக்கையாளர்கள் இந்த புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அனுகூலங்களை அவர்களது Base plan இன் விலையில் எவ்விதமான மாற்றமும் இன்றி அதே மாதாந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

Dialog Home Broadband இன் Home WiFi பிற்கொடுப்பனவு பிளான்கள், பயனர்களுக்கு இரவு நேர மற்றும் பகல் நேர டேட்டா ஒதுக்கீடு என தனித்தனியாக இல்லாமல் மேலதிக anytime dataவை வழங்கும் வகையில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் தமக்கான Data அளவை எவ்விதமான நேரக்கட்டுப்பாடும் இன்றி விரும்பிய நேரம் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தை இது அளிக்கிறது. புதிதாக புதுப்பிக்கப்பட்ட பிளான்களில் வெவ்வேறு Home WiFi தேவைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு தெரிவுகள் உள்ளன.

அதற்கமைய 50GB க்கு ரூ.1,346/ (வரி உட்பட) தொடக்கம் தெரிவுகள் உள்ளன. அதுமட்டுமன்றி, Dialog Home Broadband unlimited Data பிளான் விருப்பங்களை Home Broadband பயனர்களுக்கும் வழங்குகிறது. இதில் வாடிக்கையாளர்கள் Facebook, Instagram, YouTube, TikTok, Zoom, Google மற்றும் Microsoft 365 க்கான Unlimited Dataவை தெரிவு செய்யலாம்.

புதுப்பிக்கப்பட்ட பிளான்கள் ஏற்கனவே அவற்றை பயன்படுத்துகின்ற வாடிக்கையாளர்கள் மற்றும் எந்தவொரு புதிய Dialog Home Broadband வாடிக்கையாளர்களுக்கும் செல்லுபடியாகும், மேலும் தற்போதைய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் புதிய டேட்டா பிளான்கள் மற்றும் Data Roll Over அம்சத்துடன் மேம்படுத்தப்படும்.

மேம்படுத்தப்பட்ட சலுகைகளானவை, இன்றைய வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப அதிக டேட்டா மற்றும் அனுகூலங்கள் உட்பட, Dialog இன் Home Broadband விலைக்கேற்ற சந்தை மதிப்புடன் Home WiFi தீர்வுகளை வழங்குகின்றன.

புதிதாக மேம்படுத்தப்பட்ட Dialog இன் Home Broadband பிற்கொடுப்பனவு பிளான்கள் பற்றிய மேலதிக விபரங்களை www.dialog.lk வழியாக பார்வையிடலாம்.

# கிழக்கின் குரல்



# சமானிய மக்களின் நலன்சார்ந்த பயணத்தில் புதிய தலைமை புறப்பட்டும்

## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கு வாழ்த்து



தமிழரசுக் கட்சியின் தலைமைத் தேர்வு முடிவுகள் தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும்,கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவரது வாழ்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நீண்ட, நெடிய அரசியல் வரலாற்றினை கொண்ட எம் சமூகத்தின் பழம் பெரும் கட்சி ஒன்றுக்கு தலைமை ஏற்றிருக்கும், தங்கள் பயணம் வெற்றியளிக்கட்டும்.

வெற்றுக் கோச சித்தாந்த அரசியலுக்கப்பால் தமிழ் மக்களின் நிலம், நிருவாகம், உரிமை மற்றும் இருப்பு சார்ந்து தங்களது அரசியல் பயணம் வெற்றியடைய வேண்டும்.

மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் அடிமட்ட மற்றும் சாமானிய மக்களின் நலன்பேணும் தலைமையாக தங்கள் மிளிர வாழ்த்துகிறேன்.இப்பயணம், வரலாற்றின் புதிய பாதையில் பயணிக்க வேண்டுமென விரும்புவதாகவும் அவர் வாழ்த்தியுள்ளார்.

# நிகழ்நிலை காப்பு சட்டத்துக்கு எதிராக மட்டக்களப்பில் பாரிய ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள நிகழ்நிலை காப்பு சட்டத்திற்கெதிராக நேற்று (22) மட்டக்களப்பு நகரில் பாரிய ஆர்ப்பாட்டம் மற்றும் சத்யாகிரக போராட்டங்கள் இடம்பெற்றன. கிழக்கு மாகாண சிவில் அமைப்புகளின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவும் இதில் கலந்து கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் ஆரம்பமான கண்டன பேரணி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நிறைவடைந்தது. காந்தி பூங்காவில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம்



மற்றும் சத்யாக்கிரக போராட்டங்களில் கிழக்கு மாகாண சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் எனப் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர்

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கு கையளிப்பதற்கான மகஜரை சிவில் சமூக பிரதிநிதிகள் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவிடம் கையளித்தனர்.காலை 9 மணிக்கு ஆரம்பமான இப்ப போராட்டங்கள் பகல் ஒரு மணி வரை இடம்பெற்றது.போராட்டத்தையொட்டி மட்டக்களப்பு நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

# சமூக சேவையாளர் ஹமீட் ஆசிரியர் பட்டம் வழங்கி கௌரவிப்பு



(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

தேசிய கௌரவப் பட்டம் பெற்ற அக்கரைப்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.பீ.அப்துல் ஹமீட் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவருக்கு கௌரவம் வழங்கப்பட்டது.

மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் எம்.பீ.அப்துல் ஹமீட் ஆசிரியருக்கு தேசாபிமானி, விஷ்வகீர்த்தி தேசிய கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

ஓய்வு பெற்ற அதிபரான இவர் அக்கரைப்பற்று பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளராகவும், அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் அபிவிருத்தி குழுவின் உறுப்பினராகவும் கடமையாற்றி வருகிறார். சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருபவர்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், சன்றைஸ் எம்.எச்.ஜெயினுடின் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சிவஞானம் சிறிதரன் எம்.பிக்கு அமைச்சர் ஜீவன் வாழ்த்து



இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சி ஆரம்பமானது முதல் இன்று வரை மலையக மக்களையும் அரவணைத்துக் கொண்டே பயணித்துள்ளது, அம்மக்களுக்காக குரல் கொடுத்துள்ளது, புதிய தலைவரும் அதே வழியில் பயணிப்பாரென நம்புகின்றோம் எனவும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு கட்டட ஒப்பந்தக்காரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்துரையாடி அரசாங்கத்தினால் கிழக்கு மாகாண கட்டட ஒப்பந்தக்காரர்கள் எதிர் நோக்கும், பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளை பெற்றுத் தருவதாக, இலங்கை கட்டட நிர்மாண சங்கத்தின் தலைமைச் செயலக தவிசாளர் டாட்டரின் டோன் போல் தெரிவித்தார்.

நாட்டின் கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று காரணமாக இலங்கை கட்டட நிர்மாண சங்கத்தில் உள்ள கட்டட ஒப்பந்தகாரர்கள் கடந்த காலங்களில் எதிர் நோக்கிவந்தபிரச்சனைகளுக்குதீர்வு காணும் நோக்கில், அரசாங்கத்தினால் கிழக்கு மாகாணத்தில் உள்ள கட்டட ஒப்பந்தக்காரர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சந்திர காந்தனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதையடுத்து, இலங்கை கட்டட நிர்மாண சங்கத்தின் தலைமைச் செயலக தவிசாளர் டாட்டரின் டோன் போல் ஞாயிற்றுக்கிழமை (21) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து கிழக்கு மாகாண ஒப்பந்தக்காரர்களின் பிரச்சினைகளை பற்றி கேட்டு அறிந்து கொண்டார். இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதியுடனும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு உரிய தீர்வுகளை பெற்றுத் தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தனியார் விடுதியில் இடம் பெற்ற இந்த விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட கட்டட நிர்மாண சங்கத்தின் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. பொருளாதார நெருக்கடியின் போது கட்டட நிர்மாண பொருட்களின் விலையேற்றம் காரணமாக, தாம் பாதிக்கப்பட்டதாகவும், எரிபொருள் விலையேற்றம் மாவட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான வெள்ள அனர்த்தம் போன்ற பல காரணங்களால் தங்களது கட்டடப் பணிகள் பாதிப்படைந்துள்ளதாகவும், இவற்றைக் கருத்தில் கொண்டு இலங்கை கட்டட நிர்மாண சங்கம் தமக்குரிய தீர்வுகளைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் இந்த விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட இலங்கை கட்டட நிர்மாண சங்கத்தின் தவிசாளர், எதிர்வரும் காலங்களில் கிழக்கு மாகாணத்திற்கு மாதம் ஒரு தடவை வருகை தந்து துரிதமான தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகவும், அதிகாரிகளுடன் கலந்துரையாடி பிரச்சனைகளுக்கு தீர்வுகளை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.



அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசாரா உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கத்தினால் (2024) ஆண்டுக்கான ரீ சேட்டுகள் வழங்கப்பட்டன.இவற்றை கையளிக்கும் நிகழ்வு நேற்று( 22) கல்வியியற் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்திக்கான ரீ சேர்ட்டை பதிவாளர் எம். ஜிப்ரி, சங்கத்தின் தலைவர் ஏ.புஷ்பராஜா, செயலாளர் கே.சாதுலன், பொருளாளரும் ஊடகவியலாளருமான எம்.ஜே.எம். சஜீத் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் இணைந்து வழங்கி வைத்தனர். (படம்: அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

## சமாதான நீதவானாக சத்திய பிரமாணம்



(மணல்சேனை நிருபர்)

மட்டக்களப்பு துறைநீலாவணையைச் சேர்ந்த வயிரமுத்து பேரின்ப நாயகம் அதிபர், அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.இவர்,அண்மையில்

மட்டக்களப்பு மாவட்ட நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். துறைநீலாவணையை வசிப்பிடமாகக் கொண்ட இவர், தற்போது மகிழூர்முனை சக்தி வித்தியாலயத்தில் தரம் 01 அதிபராக கடமையாற்றி வருகிறார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணிதப் பட்டதாரியான இவர், கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி பட்டம் பெற்றுள்ளதுடன் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

# மீனவர்களுக்கு நிவாரண பொதிகள் விநியோகம்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

இயற்கை அனர்த்தம் வெள்ளப்பெருக்கு, கடல் கொந்தளிப்பு போன்றவற்றால், தொழில் வாய்ப்புகளை இழந்து நெருக்கடியான சூழலுக்குள் தள்ளப்பட்ட கடற்றொழில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.



மருதமுனை கரைவலை உரிமையாளர்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.சங்கத்தின் தலைவர் ஏ.ஆர்.எம் இக்பால் தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் (21) நடைபெற்ற இந்நிகழ்வில்,மீனவர்கள் உலருணவுகளை பெற்றுக் கொண்டனர்.

பிரதேசத்திலுள்ள தனவந்தர்கள் இவர்களுக்கான உலருணவுகளை அன்பளிப்புச் செய்தனர்.

இவ்வாறு உதவிக் கரங்களை நீட்டிய தனவந்தர்களுக்கு மீனவர் சங்கத்தினர் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார். பறக்கத் டெக்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஐ.ஏ.பரீட், பிரபல சமூக சேவையாளரும் முன்னாள் மாநகர சபை உறுப்பினருமான எம்.எஸ். எம்.ஹாரிஸ் (நவாஸ்) ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டு இங்கு உரையாற்றினார்.

# இடமாற்றம் பெற்றுச்செல்லும் வைத்தியருக்கு பிரியாவிடை



( காரைதீவு குறூப் நிருபர் )

இடமாற்றம் பெற்றுச் செல்லும் கல்முனை ஆதார வைத்தியசாலையின் இருதய நோய் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.டி. லொகுகெடகொடவுக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர், தலைமையுரை மற்றும் வரவேற்புரையை நிகழ்த்தினார். மேலும் வைத்திய நிபுணர்களினால் இருதய நோய் சத்திர சிகிச்சை நிபுணர் கே.டி லொகுகெடகொடவுடன் பணியாற்றிய அனுபவங்களையும் அலுவலகர்கள் பகிர்ந்து கொண்டனர். இதனை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்களால் டாக்டர் கே.டி. லொகுகெடகொடவுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.



## மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில்

# கண்டி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் உற்சவம்; பலரும் பங்கேற்பு

கண்டி முல்கம்பொலவில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் விசேட தைப்பொங்கல் உற்சவம் வெகுவிமர்சையாக இடம்பெற்றது. மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவரும் முன்னாள் கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளருமான தேசமானிய எஸ். பரமேஸ்வரனின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டி மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர் வேலுக்குமார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மத்திய மாகாண சாம்பர் ஒப் கொமர்ஸ் இன்டஸ் ரீஸ் தலைவர் ஜகத் திஸாநாயக்க, கண்டி தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் பி. குமாரதாஸ், லங்கா பிஸ்னஸ் ரிங் தலைவர் பசான் சந்திரசேகர மற்றும் தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள், முன்னாள் தலைவர் லோகநாதன் , இந்து இளைஞர் மன்றத்தின் செயலாளர் ஜயபிரகாஷ், பரமேஸ்வரனின் துணைவியார் சர்மிளா பரமேஸ்வரன், சமூக நலன்விரும்பிகள், முதியோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார் இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்;**

இந்து மக்களது வருடப் பிறப்பான தைத் திருநாளில் இந்து மக்கள் பகவானுக்கு பொங்கல் வைத்து ஆரம்பிப்பார்கள். அந்தப் புதுவருடமானது தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற அடிப்படையில் கொண்டாடப்படுகின்றது. அந்த அடிப்படையில் இந்த நாட்டுக்குத் தேவையான நல்லிணக்கத்திற்கு ஒற்றுமைக்கு வழி வகுக்கக்கூடிய வகையில் சமூகங்கள் ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வர்த்தகர்கள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு பல பொங்கல் விழாக்களை நடத்திக் கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் இவ்வாறான முதியோர் இல்லங்கள் அநாதைச் சிறார்கள் இருக்கக்கூடிய இல்லங்கள், மாற்றுத் திறானாளிகள் உள்ள இல்லங்கள், அதே போல வைத்தியசாலைகள் மற்றும் பொது நலன்புரி நிலையங்களில் இந்தப் பொங்கல் விழாக்கள் நடைபெறுகின்றன. இது எங்களுக்கு ஒன்றைக் காட்டக் கூடியதாக இருக்கின்றது. அதாவது, உணர்வுகளோடு மக்கள் ஒன்றாக எழுந்து முன்னோக்கிச் செல்வதற்கான ஏற்பாடுகளை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவதாக இந்த தைத்திருநாள் அமைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வழியில் இந்த நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் இந்த இடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**தேசாபிமான சமூக தீபம் இளம் சைவப்புலவர் சித்தாந்த ரத்தினம் செல்வி ராமர் அன்னலட்சுமி இங்கு கருத்து தெரிவிக்கையில்,**

இன்றைய தைப்பொங்கல் உற்சவமானது தமிழர்களுடைய பெருநாளாக விளங்குகின்றது. உழவர்களுக்கு நன்றி சொல்லுகின்ற நாளாகும். இத்தினம் 10 நாட்களுக்கு கொண்டாடப்படுகின்றது. பழையன கழிதலும் புதியனப் புகுதலும் என்ற போகிப் பண்டிகையினுடைய அர்த்தமாக விளங்குகின்றது.

இந்தப் பண்டிகைகளைப் பார்க்கின்ற போது படைத்த இறைவனுக்கே நன்றி சொல்லுகின்ற உயர்ந்த ஒருநாள் ஆகும். நாம் உயிர் வாழ்வதற்கு பஞ்ச பூதங்களுடைய செயற்பாடு இன்றியமையாதது. எனவே இந்த பஞ்ச பூதங்களின் செயற்பாடுகளின் காரணமாக விளைச்சல்கள் ஏற்படுகின்றன. அந்த விளைச்சலைத் தந்த சூரியன், சந்திரன், பூமி, உழவர், அதே போன்று உழவுத் தொழிலுக்கு உதவிய வேளாண்மை அனைத்துக்கும் நன்றி சொல்லுகின்ற மிகவும் உயர்ந்த நல்ல நாள். நாங்கள் வாழுகின்ற சமூகத்தில் அனைத்து மக்களோடும் இருக்க வேண்டும். அதே போன்று இந்த பூமியில் வாழ்வதற்கு புல் பூண்டு முதல் மனிதர்கள் தேவர்கள் என அனைத்து ஜீவம்சங்களுடைய பெரியதொரு கடாட்சம். அந்த வகையில் இயற்கையினுடைய சமநிலையைப் பேணும் முகமாக இந்தத் தைத் திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் இயற்கை சமநிலை இல்லை என்ற கருத்தினுடைய தாத்பரியத்தால் இயற்கையினுடைய சமநிலையைப் பேண வேண்டும் என்ற தத்துவத்தை உலகிற்கு எடுத்துச் சொல்வது இந்த தைத்திருநாள் ஆகும்.

அந்த வகையில் இன்று கண்டி பேராதனை வீதியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் கொண்டாடப்படுகிறது. முதியவர்களை இணைத்துக் கொண்டு அனைத்திற்கும் தாயாக விளங்குகின்ற பூமாதேவியின் விளைச்சலைப் பெற்று தியாகத்தின் வடிமாக இங்கு இருக்கக் கூடிய முதியோர்களாக விளங்கக் கூடிய பெற்றோர்களையும் நினைத்து அனைத்து மக்களுடனும் இயற்கையை நேசித்து நல்லிணக்கத்துடன் இந்த தைத்திருநாளைக் கொண்டாடியுள்ளோம்.





இதற்காக அனுசரணை வழங்கியவர் கண்டி வர்த்தக சங்கத்தின் முன்னாள் செயலாளர் எஸ். பரமேஸ்வரன் அவர்களினதும் அவரது குடும்பத்தினர்களினதும் முயற்சியாக இன்றைய தினம், இந்த முதியோர் இல்லத்தில் தைப்பொங்கல் நிகழ்வு கொண்டாடப்படுகிறது.

கண்டி நகரில் வாழுகின்ற அனைத்துப் பெருமக்களையும் இனமத மொழி பேதம் கடந்து அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களையும் அரவணைத்து தானும் தனது குடும்பத்தாரும் இணைந்து பரமேஸ்வரனின் தலைமையில் இன்றைய தைப் பொங்கல் உற்சவம் இன்று நடைபெற்றது. இவை மட்டுமல்ல பரமேஸ்வரன் பல்வேறு சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்தி பலருக்கும் முகம் தெரியாமல் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றவர். இன்றைய தருணத்தில் அத்தனை நல்லுள்ளங்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவராக விளங்குகின்றார். அவருக்கு இறைவனுடைய கடாட்சம் பரிபூரணமாக நாமும் இன்றைய நாளில் பிரார்த்திப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பெரண்ட் நீட் முதியோர் இல்லத்தின் பொருளாளர் சுமதி குணசேகரன் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,**

இந்த முதியோர் இல்லம் 1837 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையமாகும். இன்று 185 ஆண்டு நிறைவை பூர்த்தி செய்துள்ளது. இலங்கையில் இரண்டாவது ஆரம்பிக்கப்பட்ட முதியோர் இல்லம் இதுவாகும்.

கண்டி பெரண்ட் நீட் சமூக அமைப்புக்கு மூன்று கிளைகள் உள்ளன. கண்டி பேராதனை வீதியில் முல்கம்பொலவில் அமைந்துள்ள இல்லம்தான் பிரதான நிலையமாகும். அம்பிடியவில் ஒரு கிளை இருக்கிறது, வெகு விரைவில் குலுகம்மன என்ற இடத்தில் திறக்கவுள்ளோம். இந்த கண்டி இல்லத்தில் மொத்தமாக 160 பேர் இருக்கிறார்கள். பெரண்ட் பிரிவில் இருக்கிறது. அதில் 30 பேர் இருக்கிறார்கள். ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளில் பிள்ளைகள் இருப்பவர்களுடைய பெற்றோர்கள் இங்கு இருக்கிறார்கள். இந்த நிலையத்தின் தற்போதைய முகாமையாளராக பாலித எல்கடுவ செயற்பட்டு வருகிறார். முன்னாள் தலைவராக வைத்தியர் ஜயசிங்க இருந்தார். 25 செயற்குழு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தொண்டர்களாக இருக்கிறார்கள். முதியோர்களுக்கு ஊழியம் செய்வதற்காக 25 ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படுகின்றது.

இங்குள்ள முதியவர்களிடமிருந்து எந்தவிதமான கட்டணமும் அறவிடுவதில்லை. இலவசமாக எல்லாம் வழங்கப்படுகின்றன. அவர்கள் விரும்பிக் கொடுத்தாலே தவிர அவர்களிடம் எந்தப் பணமும் நாங்கள் அறவிடுவதில்லை. எனினும் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் ஒரு சிறு தொகையினை எமது நிலையத்திற்கு வழங்குவார்கள். ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் ஒரு 10 பேர் அளவில் இருப்பார்கள். அதில் ஒரு தொகையினைத் தருவார்கள். மற்றும்படி இங்குள்ள எல்லா முதியவர்களுக்கும் இலவசமாகவே பராமரிப்பு உதவிகளைச் செய்து வருகின்றோம்.

முகாமைத்துவம் மிகவும் நன்றாக இயங்குகின்றது. தேவையானளவு நிதிகள் உள்ளன. தேவையானளவு உதவிகள் வந்து கொண்டே இருக்கின்றன. அன்னதானம் நிறையக் கிடைக்கிறது. கிடைக்கின்ற அன்னதானத்தைக் கொண்டு தாராளமாக முதியோர்களைப் பராமரிக்கக் கூடியதாக இருக்கின்றன.





தைப் பொங்கல் நிகழ்வினை நாங்கள் ஒவ்வொரு வருடமும் இங்கு செய்வோம். சமூகப் பணியாளர் பரமேஸ்வரன் அவர்கள் தான் இன்றைய தைப்பொங்கல் உற்சவத்திற்கான முழுமையான அனுசரணையும் வழங்கினார். ஏற்கெனவே இந்நிகழ்வு குறித்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் எப்படி ஏற்பாடு செய்யலாம் என்று நாங்கள் யோசித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது பரமேஸ்வரன் அவர்கள் எங்களுடன் தானாகவே முன்வந்து இந்நிகழ்வுக்கான அனுசரணையினை வழங்கினார்.





இந்நிகழ்வு சிறப்புற இடம்பெறுவதற்கு எல்லா நிர்வாகிகளும் அவருடைய குடும்பத்தினர்களும் கலந்து கொண்டு வெகு சிறப்பாக நடத்தி வைத்தார்கள். குறிப்பாக எந்தவிதமான சோர்வுகளுமின்றி தங்களுடைய வீட்டு வேலையைப் போன்று வேலை செய்தார்கள். அது தான் இந்த நிகழ்வின் வெற்றிக்குக் காரணம் என்று உண்மைப்பட கூறலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு இந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய பரமேஸ்வரன் அவர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவரும் சமூகப் பணியாளருமான தேசமான்ய எஸ். பரமேஸ்வரன் கருத்தினைப் பகிர்ந்து கொண்ட போது,**

முதியோர்கள் என்பது கடவுளுக்கு ஒப்பானவர்கள். ஐக்கிய நாடுகள் சபையின் அறிவுறுத்தலின்படி 1991 முதல் ஒவ்வொரு ஆண்டும் முதலாம் திகதி உலக முதியோர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால் நாம் அவர்களுடன் சேர்ந்து இன்று எமது தைப்பொங்கல் உற்சவத்தை கொண்டாடும் போது மனதிற்கு பெரும் ஆத்ம திருப்தியைத் தருகின்றது. முதியோரை சர்வதேச தினத்திலோ அல்லது விசேட நிகழ்வுகளிலோ மதித்து மரியாதை செய்ய வேண்டும் என்பது அல்ல ஒவ்வொரு நாளும் அவர்களை எமது அருகில் வைத்து கண்ணியப்படுத்த வேண்டும். அவர்கள் தங்களுடைய சுகத்தையும் சுதந்திரத்தையும் இழந்து தங்களை முழுமையாக அர்ப்பணித்து எம்மை பராமரித்தவர்கள்.

இருப்பினும் இந்தப் பெற்றோர்கள் மேலை நாட்டுக் கலாசாரத்தின் கால ஓட்டத்தினை பின்பற்றி வாழ வேண்டிய ஒரு துரதிருஷ்டமான நிலை இருந்து கொண்டிருகிறது. இப்படியான முதியோர் இல்லத்தின் மூலம் எண்ணற்ற முதியோர்கள் ஆதரவளிக்கப்பட்டு அரவணைக்கப்பட்டு வருகிறார்கள்.

பச்சிளம் குழந்தை, பாலகன், சிறுவன், வாலிபன், நடுத்தர வயதினன், முதியவன் என ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு கால கட்டப் பருவத்தை அடைந்து தான் ஆக வேண்டும்.

முதியோரை மதித்து முதியோர் இல்லத்தை நடத்தி வருகின்ற நல்ல உள்ளங்களை நாங்கள் இந்த இடத்தில் பாராட்டுதல் வேண்டும். முதியவர்களுடைய அனைத்து வகையான தேவைகளுக்கும் அதாவது உடல் வளத்துக்கும் பாதுகாப்புக்கும் அன்பு மற்றும் மன வளத்துக்கும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உகந்த வகையில் இந்தக் முதியோர் இல்லத்தினர் செயற்பட்டு வருகின்றனர். இன்றைய தைப்பொங்கல் தினத்தில் அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்கள் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழ உதவிகளைச் செய்து வரும் இந்த முதியோர் இல்லத்தின் சேவைக்கு நாமும் ஒரு பங்காளியாகவும் துணையாகவும் இருக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன்.

அதேவேளையில், பொங்கல் என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் இருந்து வந்தது. பொங்கல் என்றால் 'பொங்குதல்' அல்லது 'கொதிப்பது' என்று பொருள்.

உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களால் கொண்டாடப்படும் ஒரு அறுவடைத் திருநாள். சூரியன், இயற்கை அன்னை மற்றும் விளைச்சலுக்கு பங்களிக்கும் பல்வேறு பண்ணை விலங்குகளுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு கொண்டாட்டம் இது. நான்கு நாட்கள் கொண்டாடப்படும் பொங்கல் , மங்களகரமான மாதமாக கருதப்படும் தை எனப்படும் தமிழ் மாதத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது.

இது வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் 15ஆம் திகதிகளில் வரும். இந்த பண்டிகையின் போது செய்து உண்ணும் உணவிற்கும் பொங்கல் என்று பெயர். இது வேகவைத்த இனிப்பு அரிசி கலவையாகும். இது குளிர்கால சங்கிராந்தி அன்று கொண்டாடப்படுகிறது. பாரம்பரிய இந்து கணக்கீட்டு முறையின்படி, சூரியன் அதன் தென்கோடியை அடைந்து, மீண்டும் வடக்கு நோக்கி திரும்பி , மகர ராசியில் நுழையும் அந்த தினம் பொங்கல் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் என்பது இந்தியாவில் நடைபெறும் நான்கு நாள் கொண்டாட்டமாகும். முதல் நாள் போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது இரண்டாவது நாள் தைப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது, மற்றும நான்காவது நாள் காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வருகை தந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





ஜீவராஜ்


# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

110

**மாருதி கார்கள் விற்பனைக்கு**

KK-6703 MARUTI 800, 2010, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 005090



117

**வேன்கள் விற்பனைக்கு**


WP-PD-8457-ADF-KDH201V - வேன் 2007 சாம்பல் நிறம். அதியுயர் விலைக்கு CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி, தொலைபேசி 081 2081033 005173



118

**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

UP-PS-1980-Mahindra Maxximo - Single Cab - 2011 - White அதியுயர் விலைக்கு CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி, தொலைபேசி 081 2081033 005170



119

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LE-1031 MIT SUBISHI LORRY, 2007 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 005098

PX-8030 MAHINDRA MAXIMO - 2014 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 005126

226-4178 NISSAN, 1995, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 005130



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

SP-QG-4867-Bajaj-Auto RE 2 Stroke, முச்சக்கரவண்டி 2006 NEPTUNE BLUE - அதியுயர் விலைக்கு CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி, தொலைபேசி இல. 081 208 10 33 005176

YG-4552 BAJAJ 2010, YT-2505 BAJAJ 2011 THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810. 005094

---

**2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனி சட்ட சரத்து 286(1)இன் கீழான மக நகும வீதி கன்ஷரக்ஷன் இக்கியூப்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் எனும் கம்பனியின் தற்காலிக கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல். (1939ம் ஆண்டின் கம்பனி நியமம் இல. 20 (1)ற்கு அமைவாக)**

## கம்பனியின் பதிவு இல. PV 16847

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : மக நகும வீதி கன்ஷரக்ஷன் இக்கியூப்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல.81/4, நியூ நுகே வீதி, பேலியகொட |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம் கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : HC (CIVIL)32/2023/CO |
| தற்காலிக கம்பனி கலைப்பாளர் பெயர் | : G.J.David Provisional Liquidator |
| முகவரி | : C/o Deloitte Associates Level 3, No.11, Castle Lane, Colombo 4 |
| நியமன திகதி | : 10.08.2023 |

---

# அறிவித்தல்

**கடைசி உரிமைப் பத்திரத்தின் பெயர் இடம் பெறாத சொத்துரிமை சம்பந்தமாக உரிமைக்கோரல் சம்பந்தமாய் வெளிப்படுத்தப்படும் விளம்பரம்.**

**இல 1998 இல 21 படி உரிமைக்கோரல் பதிவு செய்தல் சம்பந்தமாய் 55 வது உடன்படிக்கையின் படி.**

கொழும்பு மாவட்ட ஹோமாகம பிரதேச செயலாளரின் நிர்வாக பகுதிக்குட்பட்ட மத்தேகொட கிராமத்தின் நிழல்வரைபட இலக்கம் 52008 வலய இலக்கம் 06 பத்திரத்தில் 01 ம் துண்டில் இல. 0013 படி காணி உரிமை இல. 102/14, சல்கஸ் சந்தி மத்தேகொட விலாசத்தில் வசித்த லொக்கு ராமகே இந்திரா ரணசிங்க அவர்கள் 2023.09.11 அன்று காலமாகிவிட்டார் என்பதை அறியத்தருகிறேன். (முழு விளம்பரத்தையும் வெளிப்படுத்தும் தினத்தில் இருந்து) ஒரு மாதகாலப்பகுதிக்கு முன்பாக இல.06, 1வது ஒழுங்கை புகையிரத பாதை ஹோமாகம விலாசத்தில் அமைந்திருக்கும் காணி உரித்துடமை நிவர்த்தி செய்யும் பிரதேச காரியாலயத்துக்கு விண்ணப்பம் செய்வது சம்பந்தமாக.


**பதிவாளர் காணி உரித்துடமை நிவர்த்தி செய்யும் காரியாலயம்,**
**ஹோமாகம.**

---

# மன்னிப்புக் கோரல்

எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆரம்பத்தில் BR/1484/2023 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட இல.3330/23 என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகளான கட்டளை மூலம் மட்டுப்படுத்தப்பட்ட மருந்தான PREGABALIN (150ml) என்ற மருந்தின் 7 வில்லைகளை தம்மிடம் வைத்திருந்தமை என்ற குற்றச்சாட்டு சம்பந்தமாக குற்றத்தை ஒப்புக் கொண்ட, துங்கம கச்சிகல இல. 1078/A என்ற வீட்டில் வசிக்கும், விஜேசிரி மஹதுரகே கவிஷ்க மல்ஷான் என்பவர் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சகல பொது மக்களிடமும் மன்னிப்பை கோருவதுடன் இதன் பிறகு இவ்வாறான எந்தக் குற்றங்களையும் மேற்கொள்ள மாட்டார் எனத் தெரிவித்துக் கொள்கிறார்.

**விஜேசிரி மஹதுரகே கவிஷ்க மல்ஷான்**




---

**பிஸ்காலினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை.**
**கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில்.**

எலையன்ஸ் பினான்ஸ் கம்பெனி பீ.எல்.சீ.,
இலக்கம் 84, வோட் இடம், கொழும்பு 07.
**வழக்காளி**

**வழக்கிலக்கம்** - HC/CIVIL/300/2018/ MR
**அசிகிஸ் இலக்கம்** - 38/22
**தன்மை** - ஈடு
**நடைமுறை** _ சாதாரணம்
**பெறுமதி** - ரூ.1,36,11,198.86

**எதிர்**

தெகிரி கயாஷான் மெண்டிஸ்,
இல. 106, மெண்டிஸ் கட்டிடம்,
புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
**எதிராளி**

2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் திகதி இந்த வழக்கில் பதியப்பட்டு வழங்கப்பட்ட இணக்கப்பாட்டு தீர்ப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளமையினால், அந்த தீர்வையின்படி

முறைப்பாட்டின் முதலாவது வழக்கெழு காரணி தொடர்பாக ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து பதினோராயிரத்து நூற்று தொன்னூற்றெட்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ.1,36,11,198.86) மொத்தத் தொகையையும் 2017.08.02 திகதி வரை அதன் மீதான வட்டியையும் முழுமையாக செலுத்தித் தீர்க்குமாறு கட்டளை இடப்பட்டுள்ளமையினாலும்,

முறைப்பாட்டின் இரண்டாவது வழக்கெழு காரணி தொடர்பாக ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து பதினோராயிரத்து நூற்று தொன்னூற்றெட்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ.1,36,11,198.86) மொத்தத் தொகையையும் சட்டபூர்வமான வட்டியையும் ஈடு செய்யும் பிணையாக வழக்காளியிடம் கையளிக்கப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு திரு. அச்சல வன்னி ஆரச்சியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதியும் இலக்கம் 28 ம் கொண்ட பிணைமுறியை சட்டத்தின் முன் செயல்படுத்துமாறு கட்டளை இடப்பட்டுள்ளமையினாலும்,

பிரசித்த நொத்தாரிசு திரு. அச்சல வன்னிஆரச்சியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதியும் இலக்கம் 28 ம் கொண்ட பிணைமுறியின் கீழும் அதன்படியும், மேற்படி பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக இதன் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள முழு காணிப் பகுதியையும், அதிலுள்ள கட்டிடங்களையும், அதற்குரியவையும், அதனோடு இணைந்த எவ்வகையான சகல உரித்துரிமைகளும், அந்த இடத்துடன் சம்பந்தப்பட்ட அதனுள்ளிருக்கும் எதிராளியின் எவ்வகையான மரணச் சொத்து, உரிமை, உரித்துரிமை, ஆதன உரிமை கோரிக்கை மற்றும் கோரிக்கைகள் பிணைப்படுத்தப்பட்டும் ரிட் பேராணைக்கு உட்படுத்தப்பட்டவை எனவும், மேற்படி பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக பிணைமுறியை செயற்படுத்துவதற்கு வழக்காளிக்கு உரித்துள்ளதெனவும் வெளிப்படுத்தி செலுத்துமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளமையினாலும்,

கட்டளையிடப்பட்டுள்ள மேற்படி வட்டியையும் கட்டணத்தையும் தீர்ப்பளிக்கப்பட்ட நாள் தொடக்கம் இரண்டு மாதங்களுக்குள் செலுத்துவது புறக்கணிக்கப்படும் பட்சத்தில், இதன் ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட காணியும் வளவும் அரச வர்த்தமாணியிலும், ஆகக் குறைந்தது இரண்டு தேசிய பத்திரிகைகளில் உரிய முறையில் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர், ஏல விற்பனையாளரினால் உத்தேசிக்கப்படும் மற்றும் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் விற்பனை நிபந்தனைகள் பற்றி அவ்வாறு பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் ஏல விற்பனையாளரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்காகவும், அந்த ஏல விற்பனையாளருக்கு கீழ் வருமாறு உத்தரவு கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளமையினாலும்,

i) திருத்தப்பட்டவாறு 1949, 06 ஆம் இலக்க பிணைச் சட்டத்தின் 52(1) பிரிவின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளவாறு, முதல் சந்தர்ப்பத்தில் நிலவும் சந்தைப் பெறுமதிக்கு, இதன் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணியையும் ஆதனங்களையும் விற்பனைக்காக முற்படுத்துமாறும், அந்தப் பெறுமதிக்கு விலை மனு முன்வைக்கப்பட இல்லையாயின் கட்டளையில் உரிய பணத் தொகை என விளம்பரங்களில் உள்ள மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும், அத்தகைய விற்பனையிலும் விலைமனுதாரர்கள் இல்லாவிடத்து, அந்நிலையில் இதன் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணியையும் ஆதனங்களையும் விற்பனைக்காக முற்படுத்துமாறும், அந்தப் பெறுமதிக்கும் விலைமனு முன்வைக்கப்பட இல்லையாயின் கட்டளையில் உரிய பணத் தொகை என விளம்பரங்களில் உள்ள மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும், அத்தகைய விற்பனையிலும் விலைமனுதாரர்கள் இல்லாவிடத்து, அந்நிலையில் அதனோடுள்ள ஆகக் கூடிய விலைமனுவுக்கு விற்பனை செய்வதற்கும்,

ii) வழக்காளிக்கோ அல்லது அவர் சார்பாக வேறு யாருக்குமோ குறித்த ஈடு வைக்கப்பட்ட ஆதனம் தொடர்பாக விலைமனு செய்து கொள்வனவு செய்வதற்கு இடமளிக்காதிருக்குமாறும்,.

அத்தகைய விற்பனையின் போது அவர் அல்லது அவள் விற்பனை நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்பட்டும் வழக்காளியின் உரிமை கோரிக்கை மற்றும் கட்டண அளவுகளில் இருந்து கழிவுகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது என கொள்வனவாளர் பற்றி வழக்காளி திருப்தி கொள்ளும் பட்சத்தில், அவசியமான உறுதி ஆகியனவற்றை கொள்வனவாளரின் பெயரில் உரிய முறையில் தயாரித்துக் கொடுப்பதற்கும், கொள்வனவாளர் மூன்றாம் தரத்தாராயின் கொள்வனவுத் தொகையை நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கும், ஏல விற்பனையாளருக்கு அல்லது நீதிமன்றத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறொருவருக்கு வழங்குவதற்கும் செலுத்துமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளமையினாலும்,
இதன் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணியினதும் வளவினதும் காலி உடைமையை கொள்வனவாளருக்கு வழங்குமாறு எம்பிலிப்பிட்டிய மாவட்ட நீதிமன்ற பதிவாளர் / பிஸ்கால் அதிகாரிக்கு கட்டளையிட்டு செலுத்துமாறும் கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளமையினாலும்,

மேலும், நீதிமன்ற அதிகாரி ஒருவரினால் மதிப்பீடு செய்யப்படும் வழக்குச் செலவை வழங்கி செலுத்துமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளமையினாலும், ரூபா 1,45,10,000/- தொகையில், இரு தரத்தாருக்கும் இடை.யே 2019.10.24 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின்படி ரூபா 72,53,037/- மட்டுமே செலுத்துப்பட்டுள்ளது. ஆதலினால், குறித்த கட்டளையின் பிரகாரமும், விற்பனை நிபந்தனைகள் இந்த நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரும், இதன் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியையும், அதிலுள்ள பயிர் பச்சைகளையும் அதனுடன் சம்பந்தப்பட்ட அதனுள்ளிருக்கும் எதிராளியின் எவ்வகையான உரித்துரிமை, மற்றும் கோரிக்கைகளையும் விற்பனை செய்வதற்காக இந்த அதிகாரப் பத்திரத்தின்படி இந்த நீதிமன்றத்தினால் நீர் நியமிக்கப்பட்டு கூட்டிணைக்கப்பட்டு உள்ளமையினால், இந்த ஆதனங்களுக்குள் பிரவேசித்து, கட்டளையின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியையும் ஆதனங்களையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளும் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அவை அமைந்துள்ள இடத்தில் ஏலத்தில் விற்பனை செய்யுமாறும், கீழ் வருமாறு செயல்படுவதற்கும் இத்தால் கட்டளையிட்டு அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் குறித்த ஆதனத்தை மதிப்பீட்டு பெறுமதிக்கு ஏலத்தில் விடுவதற்காக முன்வைக்குமாறும், அந்தப் பெறமானத்துக்கு விலை வைக்க எவரும் இல்லையெனில் ஆணை வழங்கப்பட்ட போது கட்டளையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு விற்பனை செய்யுமாறும்,

அந்த ஏலத்தின் போது அதற்காக அன்னிய நபர்கள் விலை வைத்து கொள்வனவு செய்வதற்கு அனுமதி அளிக்குமாறும், மேலும், கொள்வனவாளர் வழக்காளியாயின், ஏலத்தின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வழக்காளியின் உரிமை கோரிக்கை மற்றும் கட்டணத்தின் அளவுக்கு அவரின் வரவுக்கு இடமளித்து, அவர் மூன்றாம் தரத்தினர் ஆகுவாராயின், கொள்வனவு விலை நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டு உள்ளதென திருப்தி கொண்ட பின்னர் அந்த ஏலத்தின் கொள்வனவாளரின் பெயருக்கு சட்டப்படி உரிய மாதிரி வடிவத்திலான அறுதி ஆவணமொன்றைத் தயாரித்து கையொப்பமிடுமாறு அந்த ஏல விற்பனையாளருக்கு அல்லது நீதிமன்றத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அன்னிய நபருக்கு கட்டளை இடுமாறும்,

அந்த ஏலத்தின் போது, ஆதனத்தை கொள்வனவு செய்த நபருக்கு அதன் உடைமையைக் கையளிக்கமாறு எம்பிலிப்பிட்டிய மாவட்ட நீதிமன்ற பதிவாளர் / பிஸ்கால் அதிகாரிக்கு கட்டளை இடுமாறும்,

மேலும், ஈட்டு ஆதன ஏல விற்பனை பற்றி ஏல விற்பனை தினத்துக்கு ஆகக் குறைந்தது 20 நாட்களுக்கு முன்னதாக இலங்கை அரசின் வர்த்தமானியிலும், ஒரு நாளைய சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையிலும், அதே நாளைய தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளிலும் வெளியிடுமாறும், ஏல விற்பனை ஆகக் குறைந்தது 10 நாட்களுக்கு

---

# மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ உப பிரிவு (2)இன் கீழான அறிவித்தல்

### மன்னார் மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட 250 மெகாவற் காற்றலை சக்தி திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டறிக்கை (சு.தா.ம.)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினது 1988ம் ஆண்டின் 56ம் இலக்க மற்றும் 2000ஆம் ஆண்டின் 53ம் இலக்க சட்டங்களால் திருத்தி அமைக்கப்பட்டவாறு 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23(2)ற்கமைவாக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீடு அறிக்கையானது பின்வரும் இடங்களில் காலை 8.45 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை 30 நாட்களுக்கு பொதுமக்களின் பார்வைக்காக (ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர) பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து வைக்கப்பட்டுள்ளது.

1. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், 4வது மாடி, கடற்றொழில் அமைச்சு கட்டிடம், புதிய யெலகம், மாளிகாவத்தை, மருதானை, கொழும்பு 10.
2. மாவட்ட செயலகம்/ மன்னார்
3. பிரதேச செயலகம்/ மன்னார்
4. பிரதேச சபை/ மன்னார்
5. தேசிய சுற்றாடல் தகவல் மையம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை 'பரிசரபியச', 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
6. மன்னார் மாவட்ட அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மாவட்ட செயலகம்/ மன்னார்
7. இணையதளம்: www.cea.lk

பொதுமக்கள் எவரேனும் இவ்விளம்பர திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தமது கருத்துக்களை பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்க முடியும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை.**
**'பரிசரபியச' இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**இம்முறையும் சகல விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலை (online) முறைமையிலேயே பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.**

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2024 ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை முறைமையில் (Online) பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த நகரத்தையும் பாடங்களையும் சரியாக குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாற்றங்களை மேற்கொள்வதற்காக பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

02. **விண்ணப்பப்படிவம்**

2.1
- இவ்வாண்டு தொடக்கம் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவிருக்கும் சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடமும் தேசிய அடையாள அட்டை இருப்பது கட்டாயமானதாகும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத 15 வயதிற்கும் குறைவாக உள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பின் அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதருவது கட்டாயமானதாகும்.

2.2 நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதன் PDFகோவையை அச்சுப்பிரதியெடுத்து வைத்துக்கொள்வது கட்டாயம் என்பதுடன் தேவையேற்படின் அதனை சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். அச்சுப் பிரதியை திணைக்களத்துக்கு அனுப்பத் தேவையில்லை.

அரச பாடசாலை அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையிலிருந்து விலகி விடுகைப் பத்திரத்தை (விடுகைப் பத்திரம் / கல்வி பீ 59) பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே இப் பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். பாடசாலையில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றுவது கண்டறியப்படின் பரீட்சைப் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதும் தடைசெய்யப்படும்.

2.3 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. உரிய தினத்தில் நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் நிகழ்நிலை முறைமை மூடப்படும். எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது.

2.4 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைத்தால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்டத்திற்கமைவாக நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் உறுதிப்படுத்தப்படின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்டத்திற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

03. **முறைமைக்குள் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்குமான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள்**

3.1 விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,
- "https://doenets.lk" எனும் உத்தியோகபூர்வ இணையத்தளதினுள் நுழைந்து “எமது சேவை” இன் கீழுள்ள "Exam Information Centre" என்பதை (Click) செய்தோ அல்லது
- http://onlineexams.gov.lk/eic இற்குள் நுழைக.

3.2 முதலில் உங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை, தொலைபேசி எண் என்பவற்றை உள்ளடக்கி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

3.3 தேசிய அடையாள அட்டை எண்ணை பயன்படுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டு எண்ணை (OTP) பயன்படுத்தி System இற்குள் நுழைய வேண்டும்.

3.4 அங்கு அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து மேலதிக அறிவுறுத்தல்களுக்காக "Instructions" எனும் பொத்தானை Click செய்க. தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள், பொது அறிவுறுத்தல்கள், அறிவுறுத்தல்கள் காணொளியைப் (Video) பார்ப்பதற்கு மேலதிகமாக "Next" பொத்தானை தெரிவு செய்து விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு தொடங்குக.

04. **பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (னுழறடெழயன) செய்தலும்**

பரீட்சைக் கட்டணத்தை தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ செலுத்த வேண்டும்.

4.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் "Payment method" இன் கீழுள்ள "Pay by department of post" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. அங்கு உங்களுக்கு கிடைக்கப்பெறும் Reference number ஐ தபால் அலுவலகத்தில் வழங்கி உங்களது பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை உங்களுடன் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.

கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள (sms) இணைப்பை (link) செயற்படுத்துவதன் மூலம் உரிய வலைத்தளத்துக்குள் நுழைந்து விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் (download) செய்து கொள்ள முடியும்.

4.2 வங்கி அட்டைகள் (credit / debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6-9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 100/- | 150/- | 200/- | 250/- | 300/- | 350/- |

05. நீங்கள் தெரிவு செய்யும் பாடங்களும் நகரமும் மிகவும் முக்கியமானது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையத்தை அமைப்பதற்கு போதுமான பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள நகரத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்திற்கு அனுப்பப்படுவர்.

06. .நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பப்படிவத்திலுள்ள விவரங்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உங்களுக்கு கிடைக்கப்பெறும் அனுமதி அட்டையிலுள்ள விபரங்களும் தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பின் அனுமதி அட்டை கிடைத்தவுடன் உடனடியாக அவ் அனுமதி அட்டையுடன் பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளைக்கு எடுத்துவரல் வேண்டும்.

07. தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிட முகவரியை குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்கும் தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியை குறிப்பிட முடியாது. அவர்கள் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

08. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். இது பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பாடங்களுக்கும் கட்டாயமானது.

09. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் "Are you a special needs candidate? " இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

10. **விசேட கவனத்திற் கொள்ள வேண்டியவை**

10.1 இப்பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ இடமளிக்கப்படமாட்டாது.

10.2 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்களைச்சமர்ப்பித்த பின்னர் எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்பித்த பரீட்சை நிலையமோ, ஊடக மொழியோ அல்லது பாடங்களோ பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாது. எனவே தங்களின் விண்ணப்பப்படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.

10.3 இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இத்தேவையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றியிருப்பினும் பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

(40) சங்கீதம் (கீழைத்தேயம்)
(41) சங்கீதம் (மேலைத்தேயம்)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

மேற்படி விடயம் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் : 011-2784208/0112784537/ 0112785922**
**மின்னஞ்சல் முகவரி : gceolexamsl@gmail.com**
**நிகழ்நிலை அலகு : 011-3661122/011-3671568**

**தொடர் இல : 6/4/OL/2023**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு,**
**பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**த.பெ.இல 1503, கொழும்பு.**
**2024.01.23**

**எச்.ஜே.எம்.சீ.அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

# கேள்வி அறிவித்தல்

## உள்ளூராட்சி திணைக்களம் - வடக்கு மாகாணம்
## வேலணைபிரதேசசபை
## பிரதேசஅபிவிருத்தி உதவித் திட்டம்

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் எனும் திட்டத்திற்காக நிதியினைப் பெற்றுள்ளதுடன், இந்நிதியின் ஒருபகுதியினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் வேலணைப்பிரதேசசபை, வங்களாவடி வேலணை. தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிர்மாண வேலைக்காக கோருகின்றார்.

| கேள்விஎண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | வேண்டப் படும் தரம் (வீதி) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணைவைப்பு (ரூ) | |
| | | | | | | பிணை வைப்பு தொகை | செல்லுபடியா கும் காலம் |
| LDSP/NP/JAF/VPS/2022/PT02/02 | பொதுமலசல கூட நிர்மாணம், வங்களாவடி, வேலணை (கட்டம் 2) | 2.43 | C8 அல்லது மேல் (கட்டிட நிர்மாணம்) | 60 நாட்கள் | 24.04.2024 | 25,000.00 | 22.05.2024 |

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **கட்டிட** நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை(CIDA) பதிவுமேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் பகுதி 5 (Schedule) இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், வேலணைப்பிரதேசசபை** (தொலைபேசி: **021 221 1505**, தொலைநகல்: **021 221 1506**, இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 23.01.2024 ம் திகதியில் இருந்து 20.02.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், வேலணைப் பிரதேசசபை, வேலணை எனும் இடத்திலிருந்து 23.01.2024 ஆம் திகதியிலிருந்து 20.02.2024 வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்விகள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி,பிரதி) தயாரிக்கப்பட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம், வேலணைப்பிரதேசசபை வேலணை எனும் முகவரிக்கு **21.02.2024 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பதாக** கிடைக்கககூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்வி இலக்கம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

09. சகல கேள்விகளுடனும் அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்வி பிணை இணைக்கப்படல் வேண்டும்

10. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 06.02.2024 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு மாநாட்டு மண்டபம் வேலணை பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,
வேலணைப்பிரதேசசபை,
வங்களாவடி, வேலணை
23.01.2024

### பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஜும்ஆ பள்ளிவாயல் வீதி, பதுரியா நகர், மீராவோடை எனும் விலாசத்தில் வசிக்கும் முகம்மது உசனார் ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் தவருதலாக "முகம்மதுசனார்" என வைக்கப்பட்டுள்ளது. எனது குடும்பத்தாராலும், உறவினர்களாலும் முகம்மது உசனார் என அழைக்கப்படுவதாலும் எனது சகல ஆவனங்களிலும் முகம்மது உசனார் என்று உள்ளதாலும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் முகம்மது உசனார் என மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப் படுத்துகிறேன்.

அசனார் முகம்மது உசனார்.

### பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் புகையிரத நிலைய வீதி, பிறைந்துரைச்சேனை, வாழைச்சேனை எனும் முகவரியில் வசிக்கும் சப்ரினா ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் தவருதலாக "சவுறினா" என வைக்கப்பட்டுள்ளது. எனது குடும்பத்தாராலும் உறவினர்களாலும் சப்ரினா என அழைக்கப்படுவதாலும் எனது சகல ஆவனங்களிலும் சப்ரினா என்று உள்ளதாலும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சப்ரினா என மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப் படுத்துகிறேன்.

அப்துல் றகுமான் சப்ரினா.

### பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலை வீதி, மீராவோடை 04ல் வசிக்கும் முஹம்மது சாதிக் ஆகிய நான் அறியத்தருவது கடந்த 2018.08.13ம் திகதி புனித இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டு சின்னத்தம்பி சாந்தகுமார் என்ற எனது பெயரை முஹம்மது சாதிக் என்று மாற்றியுள்ளேன். அன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் முஹம்மது சாதிக் என்று ஒப்பமிட்டு வருகின்றேன் என்று இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

முஹம்மது சாதிக்

### பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் 559 எஸ்.எம். ரீ.ஹாஜியார் வீதி, ஓட்டமாவடி 01 எனும் விலாசத்தில் வசிக்கும் முகம்மது ஜாபிர் றம்ஸான் பீவி ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் தவருதலாக "றம்ளான் பீவி" என வைக்கப்பட்டுள்ளது. எனது குடும்பத்தாராலும் உறவினர்களாலும் றம்ஸான் பீவி என அழைக்கப்படுவதாலும் எனது சகல ஆவணங்களிலும் றம்ஸான் பீவி என்று உள்ளதாலும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் றம்ஸான் பீவி என மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

எம்.ஜே.றம்ஸான் பீவி

### பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் ஆலிம் குறுக்கு வீதி, வாழைச்சேனை, 05 எனும் விலாசத்தில் வசிக்கும் முகம்மது றாஸ்தீன் ஆகிய நான் அறியத்தருவது கடந்த 01.06.2023 திகதி புனித இஸ்லாத்தைத் தழுவி கொண்டு யுவராஜா என்ற எனது பெயரை முகம்மது றாஸ்தீன் என்று மாற்றியுள்ளேன். அன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் முகம்மது றாஸ்தீன் என்று ஒப்பமிட்டு வருகிறேன் என்று இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்

**சிவஞானம் முகம்மது றாஸ்தீன்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| அம்ச இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வீதி நீடிப்பிற்காக பந்தீகமவிலிருந்து பரவாக்குபுக்க வரையுமான பிரிவின் பராமரிப்பிற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்கல். RDA/ROM&M/MNT/ESE/SP/2023/50 |
| 02. | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வீதி நீடிப்பிற்காக பாலட்டுவவிலிருந்து பந்தீகம வரையுமான பிரிவின் பராமரிப்பிற்காக ஒப்பந்த அடிப்படையில் வழங்கல். RDA/ROM&M/MNT/ESE/SP/2023/51 |
| 03. | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வீதி நீடிப்பிற்காக கொடகம (பாலட்டுவ)விலிருந்து மத்தள ஹம்பந்தொட்ட வரையுமான வீதிப்பிரிவின் இருமருங்கிலும் மரம் நாட்டுதல் மற்றும் காணி சீராக்கல் செயற்பாட்டிற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்கல். RDA/ROM&M/MNT/ESE/SP/2023/52 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 ஜனவரி 23 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 12 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

## கண்டி மாநகர சபை

# பெறுகை அறிவித்தல்

கண்டி மாநகர சபைக்குரித்தான கரலிய அரங்கம் மற்றும் வாகனத் தரிப்பிடத்தின் சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**தகைமைகள்:**

(அ) சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் தொடர்பில் வியாபார பெயர் சட்டத்தின் கீழ் அல்லது நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது 2023-12-31ஆம் திகதியில் மூன்று வருட காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) சுத்திகரிப்பு வேலைகள் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகள் வழங்குதல் தொடர்பில் 03 வருடம் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதை ஆவண ரீதியாக உறுதி செய்தல் வேண்டும்.

| இல. | விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | FD/S/CC/Cleaning |
|---|---|---|
| 01 | விலைமனுவின் விலை | 2360.00 ரூபா (சகல வரிகளும் உட்பட்ட)<br>• கண்டி மாநகர சபையின் சிறாப்பருக்குச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில்<br>• காசுக் கட்டளையொன்றானால் 'மாநகர ஆணையாளர், கண்டி' எனும் பெயருக்குச் செலுத்தி 2024-02-06ஆம் திகதி வரை மட்டும் அனுப்புதல் வேண்டும். |
| 02 | விலைமனு ஆவணங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி | 2024-01-22ஆம் திகதி முதல் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் |
| 03 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2024-02-08ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை |
| 04 | விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2024-02-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் |
| 05 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் முகவரி | மாநகர கணக்காளர் (வழங்கல்), கண்டி மாநகர சபை, கண்டி. |
| 06 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் | பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பிரதான மாநகர கணக்காளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். |
| 07 | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி, இடம் மற்றும் நேரம் | 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி மாநகர மண்டபத்தில். |
| 08 | விலைமனுப் பிணை முறி | இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட 03 மாதங்கள் வரையில் செல்லுபடியாகும் காலம் சகிதம் 25000.00 ரூபாவுக்கான பிணை முறியொன்றை 'கண்டி மாநகர ஆணையாளர்' பெயரில் பெற்றுக்கொண்ட திரும்பப் பெறமுடியாத, நிபந்தனையற்ற, கோரும்போது செலுத்தக்கூடிய விலைக்கோரல் பிணை முறியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>அல்லது<br>25,000.00 ரூபா தொகையை மாநகர சிறாப்பருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>(செல்லுபடிக்காலம் 2024-02-09ஆம் திகதி முதல் 2024-05-08ஆம் திகதி வரை) |

விலைமனுக்கள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை கண்டி மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை (வழங்கல்) கணக்காளரிடமிருந்து 081-2232071 அல்லது கணக்காளர் (வருமானம்) அவர்களின் 071-8014804 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**கே.கே.பீ.ஐ.டி.பீ. விஜேதிலக,**
**மாநகர ஆணையாளர்.**

**2024-01-22ஆம் திகதி**
**மாநகர சபை, கண்டி.**

## மேல் மாகாண கல்வி, கலாசார மற்றும் கலை விடயங்கள், விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

**204, 2ம் மாடி புதிய மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி,**
**டென்சில் கொடுப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.**

### 2024ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2024.02.09 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

பொருட்கள் மற்றும் சேவை வழங்குவதற்கு பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள், நிபந்தனைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்தல் - 2024 என மற்றும் வழங்கல் அல்லது சேவை இலக்கத்தைக் குறிப்பிட்டு செயலாளர், மேல் மாகாண க்லவி, கலாசாரம் மற்றும் கலை விடயங்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விடயங்கள் அமைச்சு, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2024.02.09ம் திகதிக்கு முன்பு கையோடு அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

| வழங்கல் / சேவை இலக்கம் | வழங்கல்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | அலுவலக காகிதாதிகள் வழங்கல் | 1000.00 |
| 02 | அலுவலக உபகரணம் / மரத்தளபாடம் உருக்கு / பிளாஸ்டிக் பொருட்கள் வழங்குதல் | 1000.00 |
| 03 | மின்சார பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 1000.00 |
| 04 | இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 1000.00 |
| 05 | கணணி மற்றும் துனைப்பாகங்கள் / பெக்ஸ் இயந்திரம் / போட்டோ பிரதி இயந்திரம் / ஸ்கேனர் மற்றும் டுப்ளோ இயந்திரம் வழங்குதல். | 1000.00 |
| 06 | டோனர் / காட்ரிஜ் / மாஸ்டர் றோல் / தீந்தை வழங்குதல் | 1000.00 |
| 07 | அலுவலக அடையாள அட்டை / இறப்பர் முதிதரை / பெயர் பலகை வழங்குதல் | 1000.00 |
| 08 | வாகனங்களுக்காக டயர் / டியூப் / டேப் / பெற்றரி வழங்கல் | 1000.00 |
| 09 | வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல் | 1000.00 |
| 10 | பெயர் பலகை / பதாகை / சுவரொட்டி / கட்டவுட் வழங்குதல் | 1000.00 |
| 11 | நீச்சல் தடாகத்திற்கான இரசாயணப் பொருட்கள் / உபகரணங்கள் வழங்குதல் | 1000.00 |
| 12 | மேலைத்தேய மற்றும் கீழைத்தேய இசைக்கருவிகள் வழங்குதல் | 1000.00 |
| 13 | பதக்கம் / விருது / நினைவுப்படிகம் வழங்குதல் | 1000.00 |
| 14 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் / விளையாட்டு ஆடைகள் / விளையாட்டு உபகரணங்கள் எடுத்துச்செல்ல பேக் வழங்குதல் | 1000.00 |
| 15 | பார்மசி பொருட்கள் / போசனை / சக்தி பானங்கள் / முகக்கவசம் / கைக்கழுவும் திரவம் / கிருமிநாசினி திரவம் வழங்குதல் | 1000.00 |
| 16 | நீர்போத்தல் வழங்குதல் | 1000.00 |
| 17 | சொக்ளேட் / ஈச்சம்பழம் மற்றும் பழ வகைகள் வழங்குதல் | 1000.00 |
| | **சேவைகள்** | |
| 18 | வாகன பழுதுபார்த்தல் | 1000.00 |
| 19 | வாகன வளிச்சீராக்கி பழுதுபார்த்தல் | 1000.00 |
| 20 | வாகன டிங்கரிங் மற்றும் பெயின்ட் செய்தல் | 1000.00 |
| 21 | வாகன குசன் செய்தல் | 1000.00 |
| 22 | வாகனங்கள் சேர்விஸ் செய்தல் | 1000.00 |
| 23 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 1000.00 |
| 24 | மேலைத்தேய மற்றும் கீழைத்தேய இசைக் கருவிகள் பழுதுப்பார்த்தல் | 1000.00 |
| 25 | அலுவலக உபகரணங்கள் / மரத்தளபாடம் / உருக்கு பழுதுபார்த்தல் | 1000.00 |
| 26 | உற்சவங்களுக்கான உணவு பானங்கள் வழங்குதல் | 1000.00 |
| 27 | வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் (பஸ் / வேன்) | 1000.00 |
| 28 | நீச்சல் குளம் பழுதுபார்த்தல் விடயங்கள் | 1000.00 |
| 29 | மேடை அலங்கார மற்றும் அச்சு விடயங்கள் | 1000.00 |
| 30 | உற்சவ பொருட்கள் வழங்குதல் | 1000.00 |
| 31 | ஒலிபெருக்கி இயந்திரம் வழங்குதல் | 1000.00 |

**நிபந்தணைகள்**

01. விண்ணப்பத்தில் நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல், பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் வழங்கல்கள் / சேவை இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
02. வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் வழங்கல்கள் / சேவை வழங்கல் அனுபவம் பற்றிய நிறுவனத்தின் தகைமையை உறுதி செய்யும் ஆவணங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03. வழங்கல்கள் / சேவைகள் சேவைகளுக்காக ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விண்ணப்பங்கள் மற்றும் பதிவு செய்யும் கட்டணத்தை செலுத்த வேண்டியதுடன் அதனை நிறுவனத்திற்கு காசாக அல்லது செயலாளர், கல்வியமைச்சு (மே.மா) பெயருக்கு எழுத்தப்பட்ட காசோலை மூலம் மட்டும் செலுத்தலாம்.
04. தேவைப்பாட்டின் பிரகாரம் பதிவு செய்துள்ள வழங்குநர்களிடம் போலவே வேறு வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**2024.01.22**
**கல்வியமைச்சு**
**மேல் மாகாணம்,**
**தொ. பே இல : 0112-092883**

**செயலாளர்,**
**மேல்மாகாணம் கல்வி கலாசாரம் மற்றும் கலை விடயங்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு**

Repeat Your ad For Better Offers

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)

## உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டண திருத்தம் பொது ஆலோசனை கேட்டல் - 2024

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2024 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும், அது தொடர்பான ஆலோசனை அறிக்கைகளை www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**முன்மொழியப்பட்டுள்ள மின் கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான வாய்மூலக் கருத்துக்களை தெரிவிக்கும் அமர்வு 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இவ்வமர்வில் பங்கேற்பதற்காக பதிவு செய்ய 071 862 2800 ஐ அழைக்கவும்.**

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த பொது ஆலோசனை கேட்டல் நடத்தப்படுகிறது.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

**"உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டண திருத்தம் 2024, பொது ஆலோகனை கேட்டல்"**

தலைவர்,
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

**பெக்ஸ்:** (011) 2392641
**இணையதளம்:** www.pucsl.gov.lk
**மின்னஞ்சல்:** consultation@pucsl.gov.lk
முகநூல்: www.facebook.com/pucsl

**மேலதிக தகவல்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கும் திரு. ஹசங்க கம்புருகமுவ அவர்களை (011) 2392607/8 தொடர்பு கொள்ளவும்.**

தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

23.01.2024

Daily News Classifieds, the Housewives' companion

# நயினாதீவு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வுகள்





**யாழ்.விசேட நிருபர்**

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று செவ்வாய்கிழமை இடம்பெறவுள்ளது. அதனை முன்னிட்டு, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோபுரங்கள், தூபிகளுக்கு கலசம் வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 07 மணி முதல் , இன்று செவ்வாய்க்கிழமை மாலை 05 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நாளை புதன் கிழமை காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

## வடக்கின் உதயம்

# மன்னார் தமிழ் சங்கத்தில் பொங்கல் விழா






**(தலைமன்னார் விசேட நிருபர் )**

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழர் தைத்திருநாள் பொங்கல் விழா நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (21) காலை மன்னார் வாழ்வோதய மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேசச் செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு ஓய்வு நிலை மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்டியன் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு பேச்சாளராக மன்னார் உதவி தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் நடனம், கிராமிய நடனம் , கவிதை , கிராமியப்பாடல் ஆகியவற்றுடன் மகா தர்மகுமார சர்மா தலைமையில் சமூக அறப்பிறழ்வுக்கு பெரிதும் காரணம் போதைப் பொருளா? சமூக ஊடகமா? என்ற கருப்பொருளில் சிறப்பு பட்டிமன்றம் ஆகியவையும் இடம் பெற்றன.

கலந்து கொண்ட விருந்தினர்கள், மன்னார் தமிழ்ச் சங்கத்தால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழில். உணவருந்திக் கொண்டிருந்தவர் உயிரிழப்பு

**(யாழ்.விசேட நிருபர்)**

உணவருந்திக்கொண்டு இருந்த வேளை விக்கல் ஏற்பட்டத்தில் மயங்கி விழுந்தவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியைச் சேர்ந்த மயில்வாகனம் ஐங்கரன் (வயது 41) என்பவரே உயிரிழந்துள்ளார். வீட்டில் ஞாயிற்றுக்கிழமை மதிய உணவு அருந்திக்கொண்டிருந்த வேளை திடீரென விக்கல் ஏற்பட்டதை அடுத்து, கதிரையில் இருந்து மயங்கி சரிந்துள்ளார்.

உடனே அவரை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

# புதுக்குடியிருப்பில் துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்ட நபர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டி திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரிடம் வசமாக சிக்கிய சம்பவம் ஒன்று (21.01.2024) இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மைய பல நாட்களாக துவிச்சக்கர வண்டிகள் திருடப்பட்டு வந்துள்ளன. இந்நிலையில் அன்றையதினம் துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 49 வயது மதிக்கதக்க நபர் இரகசிய கமராவின் உதவியுடன் புதுக்குடியிருப்புப் நகர் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.




இலங்கை தேசிய சமாதான பேரவையின் ஊடாக செயல்படும் அனைத்து முக்கிய துறைகளையும் சேர்ந்த, பிரமுகர்களை உள்ளடக்கிய மாவனல்லை "சமந்த லங்கா சாமபதனம" குழுவினர் மன்னாருக்கான சமாதான விஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டனர்.

சமயங்களுக்கிடையிலான சக வாழ்வை கட்டியெழுப்பும் நோக்கில் சர்வமதத் தலைவர்களை உள்ளடக்கிய முக்கிய உறுப்பினர்களைக் கொண்ட மாவனல்லை சர்வமத குழுவினர் மன்னாருக்கு மேற்கொண்ட விஜயத்தில் மத போதகர்கள் மற்றும் அங்குள்ள முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து உரையாடியதோடு, மத ஸ்தாபனங்களையும் பார்வையிட்டுள்ளனர்.

# மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நீர்தேக்கங்களில் நீர்மட்டம் குறைவு

**( மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர் )**

மலையகப் பகுதிகளில் தொடரும் வெப்பமான வானிலை காரணமாக நீர்தேக்கப் பகுதிகளில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளன.

குறிப்பாக மவுஸ்சாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட எட்டு அடி குறைந்து உள்ளதாக நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர, நவலக்சபான ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டும் வெகுவாக குறைந்துள்ளன. இவ்வாறு வெப்பமான வானிலை தொடரும் பட்சத்தில் மலையகப் பகுதிகளில் குடி நீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது. கடந்த சில மாதங்களாக மத்திய மலைநாட்டில் தொடர் மழையால் மலையகப்பகுதிகளில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட அதிகமாக காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.




அயோத்திய நகரில் நேற்று (22.01.2024) திங்கட்கிழமை நடைபெற்ற இராமர் ஆலய கும்பாபிசேகத்தை முன்னிட்டு நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்றது. நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபை தலைவர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் இப்பூஜை நடைபெற்றது. ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர். விசேட அதிதியாக கண்டி இந்திய உதவித் தூதரகத்தின் உதவித் தூதுவர் டாக்டர் ஆதிரா எஸ். கலந்து கொண்டார்.

# சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்த நால்வர் கைது

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

யுக்திய விசேட சுற்றிவளைப்பின் போது பலாங்கொடைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக பாரிய அளவில் மதுபானம் தயாரித்த நான்கு நபர்களை பொலிஸாரும் விசேட அதிரடி படையினரும் கைது செய்துள்ளனர்.

பலாங்கொடை பெங்கிவத்த வளவ கங்கை அருகிலும் மற்றும் இராசகல மெத்தகந்த பிரதேசத்திலும் சட்டவிரோதமாக பாரியளவில் மதுபானம் தயாரித்த நான்கு நபர்களை விசேட அதிரடிப் படையினரும் பலாங்கொடை மற்றும் சமனலவெவ பொலிஸாரும் ஒன்றிணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்களை கைது செய்து உள்ளனர்.

# சவுதி அரேபியாவுக்கு பணிப் பெண்ணாக சென்ற தாயைக் காணவில்லை என தகவல்

**(பலாங்கொடைதினகரன் நிருபர்)**

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவுக்கு பணிப் பெண்ணாக வேலைக்குச் சென்ற பலாங்கொடை உடுமுல்ல ஆனந்த மைத்திரி மாவத்தையில் வசிக்கும் கொடகும்புரகே தீபானி அமரசிங்க(56) என்ற பெண்ணைப் பற்றி இதுவரை எந்த தகவலும் இல்லை என அவரது ஒரே மகளான கல்ஹாரி கமகே(30) தெரிவித்தார். தனது தாய் சவுதி அரேபியாவுக்கு பணிப் பெண்ணாக 2013. 04.19 சென்றதாகவும் அன்றிலிருந்து ஒரு வருட காலம் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டு கடிதங்களும் அனுப்பி வந்தார். எனினும் அதன் பிறகு என்னுடன் எந்தவிதத் தொடர்பும் கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்.

எனது தந்தையும் எனக்கு 7 வயது ஆக இருக்கும் போது காலமானார். இதனால்தான் எனது தாயார் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்குச் சென்றார். எனது தாயார் இதற்கு முன்னர் துபாய் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் பணிப்பெண்ணாக கடமையாற்றி உள்ளார். அந்த நாடுகளில் எந்தவித பிரச்சினைகளும் தாயாருக்கு ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். நான் தற்பொழுது எனது பெரியம்மாவுடன் வாழ்ந்து வருகிறேன். நான் வெளிவாரி பட்டதாரி பாடநெறி ஒன்றினை செய்வதற்கு ஆரம்பித்தேன். எனினும் தாயாரைப் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காமையால் நான் அதனை கைவிட்டேன். தற்பொழுது எனக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை. வெளிநாட்டு அமைச்சர் அல்லது ஜனாதிபதி இது சம்பந்தமாக கவனம் செலுத்தி எனது தாயாரை இலங்கைக்கு வரவழைத்து தர நடவடிக்கை எடுக்குமாறு இவர் கண்ணீருடன் வேண்டினார்.




மாத்தளை அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் பொங்கல் விழா ஆலய வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாத்தளை சைவ மகா சபை உறுப்பினர்களும், தேவஸ்தானத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். (படங்கள் : கண்டி மு . தீபன்)

# நுவரெலியா, கெப்பட்டிபொல சந்தைகளை விட தம்புளையில் மரக்கறி விலை குறைவு

நுவரெலியா மற்றும் வெலிமடை கெப்பட்டிபொல மற்றும் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் (22.01.2023) விற்பனை செய்யப்படும் மரக்கறிகளின் விலைப்பட்டியலை நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய காரியாலயம் வெளியிட்டுள்ளது. இதனடிப்படையில் நுவரெலியா மற்றும் வெலிமடை, கெப்பட்டிபொல பிரதேசங்களில் இருந்து தம்புள்ள பொருளாதார மத்திய நிலைய சந்தைக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படும் மரக்கறிகளின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் கடந்த காலங்களில் விலை உச்சம் கண்டிருந்த நுவரெலியா மற்றும் வெலிமடை மரக்கறிகள் பல தம்புளையில் விலை வீழ்ச்சியுடன் விற்பனை செய்யப்படுவதை விலை பட்டியல் சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணத்தை வெற்றியுடன் ஆரம்பித்தது இலங்கை இளையோர்



தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் தனது முதல் ஆட்டத்தில் சிம்பாப்வே அணியை டக்வர்த் லுவிஸ் முறையில் 39 ஓட்டங்களால் தோற்கடித்த இலங்கை இளையோர் அணி சி குழுவுக்கான இரண்டாவது போட்டியில் நமீபிய அணியை நாளை (24) எதிர்கொள்ளவுள்ளது.

கிம்பர்லியில் நேற்று முன்தினம் நடந்த சிம்பாப்வேயுக்கு எதிரான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணி 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தபோதும் மத்திய வரிசை வீரர்கள் அணியின் ஓட்டங்களை அதிகரிக்க உதவினர். குறிப்பாக தினுர கலுபஹன 60 ஓட்டங்களை பெற்றதோடு விக்கெட் காப்பாளரான கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் கல்லூரியின் ஷருஜன் ஷன்முகநாதன் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை இளையோர் அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களை பெற்றது.

எனினும் போட்டியில் மழை குறுக்கிட்டதால் சிம்பாப்வே அணியின் வெற்றி இலக்கு 22 ஓவர்களில் 129 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த சிம்பாப்வே அணி 21.1 ஓவர்களில் 89 ஓட்டங்களுக்கே சுருண்டது. சுழற்பந்து வீச்சாளர் மல்ஷ தருபத்தி 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

# வலைப்பந்து சம்பியனானது ஹட்டன் நெஷனல் வங்கி




வென்னப்புவ அல்பட் எப். பீரிஸ் அரங்கில் நேற்று முன்தினம் (21) முடிவுற்ற டயலொக் தேசிய வலைப்பந்து தொடரில் தொடர்ந்து ஆறாவது முறையாகவும் ஹட்டன் நெஷனல் வங்கி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது.

இதன் இறுதிப் போட்டியில் ஹட்டன் நெஷனல் வங்கி அணி 40–39 புள்ளிகளால் விமானப்படை அணியை தோற்கடித்தது. இதன் இரண்டாவது சுற்றில் மாத்திரம் முன்னிலை பெற்றே ஹட்டன் நெஷனல் வங்கி அணி சம்பியன் கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

மொத்தம் 26 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் துறைமுக அதிகாரசபை அணியை 61–49 புள்ளிகளால் வீழ்த்திய கடற்படை அணி மூன்றாம் இடத்தை வென்றது.

இலங்கை தேசிய வலைப்பந்து அணியின் பல வீராங்கனைகளை உள்ளடக்கிய ஹட்டன் நெஷனல் வங்கி அணி அரையிறுதிப் போட்டியில் துறைமுக அதிகாரசபை அணியை வீழ்த்தியே இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்தது.

# சர்வதேச செய்திகள்

## சீனாவில் நிலச்சரிவு: 47 பேர் புதைந்தனர்



தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்தில் நேற்றுக் (22) காலை இடம்பெற்ற நிலச்சரிவு ஒன்றில் குறைந்தது 47 பேர் புதையுண்டுள்ளனர்.

சவோதொங் நகரில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் அங்கு நிலவும் பூஜ்ஜியத்திற்கு குறைவான வெப்பநிலைக்கு மத்தியில் தீவிர மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இடிந்த கட்டடங்களில் மீட்பாளர்கள் தேடுதலில் ஈடுபட்டிருக்கும் வீடியோக்களை உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

அந்தப் பகுதியில் இருந்து 500க்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். 18 குடும்பத்தைச் சேர்ந்த 47க்கும் மேற்பட்டோர் மண்ணில் புதைந்துள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் 200 மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சீனாவின் மலைகளைச் சூழவிருக்கும் தொலைதூர பிராந்தியங்களில் நிலச்சரிவுகள் வழக்கமாகும். 2013 இல் இதே சவோதொங் நகரின் சென்சியோங் பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டனர்.

## அமெரிக்காவில் பனிப்புயல்: 90க்கும் மேற்பட்டோர் பலி



அமெரிக்காவில் கடந்த வாரம் முழுதும் வீசிய பனிப்புயலில் 90க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். டென்னசீ, ஒரேகன் உள்ளிட்ட மாநிலங்களில் அந்த மரணங்கள் பதிவாகின. கடுமையான பனிப்புயல் காரணமாக அந்த மாநிலங்களில் நெருக்கடிநிலை இன்னமும் நடப்பில் உள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் மின்சாரமின்றி தவித்து வருகின்றனர். இந்த வாரமும் பனிப்புயல் வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டென்னசீயில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குழாய்கள் உடைந்துவிட்டதால் அந்த மாநிலத்தில் வசிக்கும் சுமார் 400,000 குடியிருப்பாளர்கள் தண்ணீரைக் கொதிக்கவைத்துப் பயன்படுத்தும் சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

குடிக்க, பல் துலக்க, பாத்திரங்களைக் கழுவ, உணவு சமைக்க என அனைத்துக்கும் கொதிக்கவைத்த நீர் பயன்படுத்தப்படுகிறது.

சில உணவகங்களும் உணவு விடுதிகளும் போத்தல் தண்ணீரைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுகின்றன. வேறுவழியில்லாத உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. மழையால் அமெரிக்காவின் மத்திய, வடகிழக்குப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படும் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது.

## ஆக்கபூர்வ உறவுக்கு மாலைதீவு உறுதி



அண்டை நாடுகளுடனும் அனைத்து நட்பு நாடுகளுடனும் சாதகமானதும் ஆக்கபூர்வமானதுமான உரையாடல்களை வளர்ப்பதில் மாலைதீவு உறுதியாக உள்ளது என்று அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மூஸா ஜமீர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டின் யூனியன் பிரதேசமான லட்சத்தீவுக்கு மேற்கொண்ட விஜயம், குறித்து மாலைதீவு இராஜாங்க அமைச்சர்கள் சிலர் சமூக ஊடகங்களில் பதிவிட்ட கருத்துக்கள் மாலைதீவு அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை பிரதிபலிப்பவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி இப்றாஹிம் சோலிஹ், “இந்தியா மாலைதீவுக்கு எப்போதும் நல்ல நண்பராக இருந்து வருகிறது, அதிகாரிகளின் இவ்வாறான கருத்துக்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான பழமையான நட்பை பாதித்து விட இடமளிக்கக்கூடாது. இச்செயலில் ஈடுபட்டவர்களைக் கண்டிக்கின்றேன்” என்றுள்ளார்.

# பணயக்கைதிகளை விடுவிக்கும் ஹமாஸின் நிபந்தனையை இஸ்ரேல் பிரதமர் நிராகரிப்பு

## தெற்கு காசாவில் சரமாரித் தாக்குதல்



காசா போரின் மையப் பகுதியாக மாறியிருக்கும் தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகர் மீது இஸ்ரேலிய இராணுவம் நேற்றும் குண்டு மழை பொழிந்த நிலையில் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ் அமைப்பு விடுத்த நிபந்தனையை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நிராகரித்துள்ளார்.

எனினும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்ப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கு வரும்படி கோரி இஸ்ரேலுக்குள் நெதன்யாகுவுக்கு அழுத்தம் அதிகரித்து வருகிறது.

கான் யூனிஸில் ஞாயிறு இரவு தொடக்கம் மீண்டும் கடுமையான தாக்குதல்கள் இடம்பெற்று உயிர்ச்சேதங்கள் அதிகரித்து வருவதோடு இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் ஹமாஸ் போராளிகள் இடையே தீவிர மோதல் நீடித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவில் இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதை இஸ்ரேல் நிராகரித்ததால், பணயக்கைதிகள் வீடு திரும்புவதற்கு வாய்ப்பு இல்லை என்று மூத்த ஹமாஸ் அதிகாரியான சமி அபூ சுஹ்ரி தெரிவித்துள்ளார்.

“எமது பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு பகரமாக, போரை முடிவுக்குக் கொண்டுவந்து எமது படைகளை காசாவில் இருந்து வாபஸ் பெறும்படியும் அனைத்து கொலைகாரர்கள் மற்றும் கற்பழிப்பாளர்களை விடுவிக்கும்படியும் ஹமாஸ் கோருகிறது” என்று நெதன்யாகு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று ஹமாஸை அப்படியே விட்டுவிடும்படியும் கோருகின்றனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

“கொடிய ஹமாஸிடம் சரணடையும் நிபந்தனைகளை நான் முற்றாக நிராகரிக்கிறேன்” என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போதே சுமார் 240 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். எனினும் கடந்த நவம்பரில் கட்டார் மற்றும் எகிப்தின் மத்தியஸ்தத்தில் எட்டப்பட்ட உடன்படிக்கையில் 100க்கும் அதிகமான பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. இதற்கு பகரமான இஸ்ரேல் சிறையில் இருக்கும் 240 பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து சுமார் 136 பணயக்கைதிகள் காசாவில் உள்ள நிலையில் அவர்களை விடுவிப்பது தொடர்பில் நெதன்யாகு அரசுக்கு இஸ்ரேலுக்குள் அழுத்தம் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் பணயக்கைதிகள் மற்றும் காணாமல்போனோரது குடும்பங்களின் மன்றம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், “பொதுமக்கள், படையினர் மற்றும் ஒக்டோபர் நிகழ்வில் கடத்தப்பட்ட ஏனையவர்களை நாம் கைவிட மாட்டோம் என்பதை நெதன்யாகு குறிப்பிட வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

“நாம் மேம்பட்ட உடன்படிக்கை ஒன்றுக்கு தற்போது வர வேண்டும். பணயக்கைதிகளை தியாகம் செய்ய பிரதமர் தீர்மானித்திருந்தால், அவர் தலைமைத்துவத்தை காண்பித்து இஸ்ரேலிய மக்களுடன் நேர்மையாக தனது நிலைப்பாட்டை பகிர்ந்துகொள்ள வேண்டும்” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெதன்யாகுவின் இல்லத்திற்கு வெளியில் ஆர்ப்பாட்டம் நடத்திய பணயக்கைதிகளின் உறவினர்கள் உடன் நடவடிக்கை எடுப்பதற்கு வலியுறுத்தினர்.

“அவர்கள் உருவாக்கிய சிக்கலை சரிசெய்து, இந்த பணயக்கைதிகளை உடனடியாக வீட்டுக்கு கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று பணயக்கைதியான ஹெர்ஷ் கோட்பேர்க் போலினின் தந்தை ஜோன் போலின் தெரிவித்துள்ளார்.

### ஹமாஸ் வெளிப்படை அறிக்கை

இந்தப் போரைத் தூண்டிய ஒக்டோபர் 7 தாக்குதல் தொடர்பில் முதல் முறை வெளிப்படையாக பேசி இருக்கும் ஹமாஸ் அமைப்பு, அதில் சில தவறுகள் இருந்தபோதும் காசாவில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஓர் அங்கமாக அந்தத் தாக்குதல் இருந்தது என்று தெரிவித்துள்ளது.

பலஸ்தீன் நிலங்களில் இஸ்ரேலிய ஆக்கிமிப்புக்கு எதிராகவும், பலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கான வழியாகவும் ஒக்டோபர் 7 தாக்குதல் அவசியமான நடவடிக்கையாக இருந்தது என்று ஹமாஸ் அமைப்பு வெளியிட்டிருக்கும் 16 பக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 7 தாக்குதலின்போது 1,200 பேர் வரை கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியிருந்தது. “பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட்ட ஏதேனும் சம்பவம் இருந்தால், அது தற்செயலாக மற்றும் ஆக்கிரமிப்பு படைகளுடன் மோதலின் போது நடந்தது” என்று ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.

“குழப்பத்தில் இஸ்ரேல் இராணுவம் மற்றும் பொலிஸாரால் பல இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்” என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




காசாவில் நேற்று சூரியோதயத்திற்கு முன்னிருந்து இஸ்ரேல் போர் விமானங்கள் சரமாரித் தாக்குதல்களில் ஈடுபட்டன. குறிப்பாக தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகர் கடும் தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது. இதில் அங்கு போர் ஆரம்பித்தது தொடக்கம் இல்லாத அளவு நேற்று முன்தினம் இரவில் கடும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கான் யூனிஸின் தென் பகுதியில் உள்ள கிசான் ரிஷ்வான் பகுதியில் பல வீடுகள் மீது விழுந்த ஷெல் குண்டுகளில் அந்தப் பகுதி தரைமட்டமாக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கான் யூனிஸில் இடம்பெற்ற வான் தாக்குதல் ஒன்றில் 3 சிறுவர்கள் உட்பட குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

முன்னதாக வடக்கு காசாவில் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தபோது பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயமாக இஸ்ரேலால் அறிவிக்கப்பட்ட கான் யூனிஸ் தற்போது பெரும் அழிவுகளை சந்தித்துள்ளது. அங்குள்ள நாசர் மருத்துவமனை மற்றும் எல் அமல் நகர மருத்துவமனைக்கு அருகில் கடும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் நகரில் உள்ள காசாவின் மிகப்பெரிய பல்கலைக்கழகமும் இலக்கு வைக்கப்படுவதாக அங்குள்ள அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பகுதியில் தரை, வான் மற்றும் கடல் மார்க்கமாக தாக்குதல்கள் நீடிப்பதால் மக்களுக்கு தப்பிச் செல்வதற்கான வழிகளும் இல்லாமல் உள்ளன.

ஆளில்லா விமானங்கள் நகரெங்கும் சுற்றித் திரிவதோடு நகரும் அனைத்தின் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

காசாவில் கடந்த நான்கு மாதங்களாக நீடித்து வரும் இடைவிடாத தாக்கதல்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25,000ஐ தாண்டி இருப்பதோடு இதில் 70 வீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பை முற்றாக ஒழிப்பதாக நெதன்யாகு சூளுரைத்தபோதும், போர் ஆரம்பித்தது தொடக்கம் அந்த அமைப்பு இதுவரை 20–30 வீதமான போராளிகளையே இழந்திருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனம் கணித்துள்ளது.

வோல் ஸ்ட்ரீட் ஜெர்னல் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த உளவு அறிக்கையில், இஸ்ரேலிய துருப்புகளுடன் போராடும் திறனையும் இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தும் திறனையும் ஹமாஸ் தொடர்ந்து பெற்றிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவின் 2.4 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கும் சூழலில் தினசரி தாக்குதல்களுக்கு மத்தியில் உணவு, நீர் மற்றும் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அங்கு பஞ்சம் மற்றும் நோய் பரவல் குறித்து ஐ.நா நிறுவனங்கள் எச்சரித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஞாயிறன்று மனிதாபிமான உதவிகளுடன் 260 லொறிகள் காசாவை அடைய இஸ்ரேல் அனுமதித்துள்ளது. எனினும் இது போருக்கு முந்தைய நிலையை விடவும் மிகக் குறைவான எண்ணிக்கையாகும்.

### பிராந்திய பதற்றம்

இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில் லெபனான் எல்லையை ஒட்டிய வடக்கு இஸ்ரேலில் ரொக்கெட் தாக்குதல் எச்சரிக்கையாக சைரன் ஒலி எழுப்பப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இஸ்ரேலிய படை மற்றும் லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா போராளிகளுக்கு இடையே கிட்டத்தட்ட தினசரி மோதல் நீடிப்பதோடு தெற்கு லெபனானின் பல இடங்களிலும் நேற்று முன்தினம் இரவு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இஸ்ரேலின் இவ்வாறான வான் தாக்குதல் ஒன்றில் ஹிஸ்புல்லா போராளி ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்துள்ளது. அங்கு இஸ்ரேலிய இராணுவம் தினசரி சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டு வருவதோடு ஜெரூசலம், ஹெப்ரோன் உட்பட பல இடங்களில் இடம்பெற்ற புதிய சுற்றிவளைப்புகளில் மேலும் 15 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் ஆறாயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டிருப்பதோடு குறைந்து 370 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

செங்கடலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது யெமன் ஹூத்திக் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் பதில் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. சிரியா மற்றும் ஈராக்கிலும் இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் அமெரிக்க நிலைகள் மீது ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவது பதற்றத்தை அதிகரித்துள்ளது. கட்டாரை தளமாகக் கொண்டு இயங்கும் ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே, கடந்த ஞாயிறன்று துருக்கி வெளியுறவு அமைச்சரை சந்தித்து மோதல் மற்றும் மனிதாபிமான உதவி தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

காசாவில் இஸ்ரேலிய தாக்குதலில் காயத்திற்கு உள்ளான அப்தல் ரஹ்மான் இயாத், எகிப்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள பிரான்ஸின் கடற்படை கப்பலான டிக்ஸ்முட்டில் சிகிச்சை பெற்று வருகிறார். தாக்குதல் நடக்கும்போது வீட்டை விட்டு தன்னால் வெளியேறுவதற்கு நேரம் இருக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

“நான் எனது பெற்றோர், எனது சகோதரர், எனது சகோதரி, எனது இரண்டாவது சகோதரி மற்றும் அவளது கணவர் மற்றும் அவர்களின் மகளுடன் இருந்தேன். நான் மட்டும் தான் உயிர் தப்பினேன்” என்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு இயாத் கூறினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.